கள்ளரின மன்னன்

# இராசராச சோழன்



புலமை வேங்கடாசலம் வன்னியர்,
எம். ஏ., பி. எல்.,

T-UN-374

# கள்ளரின மன்னன்
# இராசராச சோழன்

அணிந்துரை :

**இரா. பெருமாள் சேதிராயர்,** பி. ஏ., பி. எல்.,
வழக்கறிஞர், தமிழ்நாடு பார்கவுன்சில் உறுப்பினர்,
தஞ்சாவூர்.

ஆசிரியர் :

**புலமை வேங்கடாசலம் வன்னியர்,**
எம். ஏ., பி. எல்.,
வழக்கறிஞர், தஞ்சாவூர்.

தர்மாம்பாள், இராமசாமி சேதிராயர் நினைவு
கல்வி அறக்கட்டளை வெளியீடு-1.

வெளியீடு—1

முதற்பதிப்பு : மார்ச்சு 1996

உரிமை : ஆசிரியருக்கு

நூல் பெயர் : கள்ளரின மன்னன்
இராசராச சோழன்

நூலாசிரியர் : புலமை வேங்கடாசலம் வன்னியர்

விலை : ரூ. **15/-**

வெளியிட்டோர் : தர்மாம்பாள், இராமசாமி சேதிராயர் நினைவு கல்வி அறக்கட்டளை.

அச்சிட்டோர் : மாணிக்கம் அச்சகம், தஞ்சாவூர்-9.

கிடைக்குமிடங்கள் : 1) 15, பூக்கார இரண்டாந் தெரு, தஞ்சாவூர்-613 001.

2) அப்பர் புத்தக நிலையம்,
46-A, தெற்கு வீதி,
தஞ்சாவூர்-613 009.

**காணிக்கை**

கருப்பமுதலியார்கோட்டை

**திருமதி ஞானசரசுவதி அம்மாள்**

அவர்கட்கு



**இரா. பெருமாள் சேதிராயர்,** பி ஏ., பி. எல்.,
வழக்கறிஞர்
தமிழ்நாடு பார்கவுன்சில் உறுப்பினர்
39, இராசராச சோழன் நகர்,
**தஞ்சாவூர்.**

## அணிந்துரை

**கள்ளரின மன்னன் இராசராச சோழன்** என்னும் தலைப்பிலமைந்த இந்நூல், ஓர் அரிய வரலாற்றாய்வு நூலாகும்.

கல்வெட்டுக்கள், செப்பேடுகள், சிலாசாசனங்கள், இலக்கியங்கள், வரலாற்றாய்வு நூல்கள் ஆகியவற்றிலிருந்து செய்திகளைச் சிரமப்பட்டுச் சேகரித்து, அன்புச் சகோதரர் **புலமை வேங்கடாசலம் வன்னியர்** அவர்கள் இந்நூலை எழுதியிருக்கிறார்.

**கள்ளர் வரலாறு** என்னுந் தலைப்பில் வெளியான இவரது நூலை, **புதுக்கோட்டை அரசர் மாமன்னர் இராசகோபாலத் தொண்டைமான்** அவர்களும் பிறரும் பாராட்டியது போல், இந்த நூலையும் பாரோர் போற்ற வாழ்த்துகிறேன்.

இந்த நூல் எனது பெற்றோர், **தர்மாம்பாள், இராமசாமி சேதிராயர் நினைவு கல்வி அறக்கட்டளையின்** சார்பில் முதல் வெளியீடாக வெளி வருவதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

இங்ஙனம்,
**இரா. பெருமாள் சேதிராயர்.**




**புலமை வேங்கடாசலம்**
**வன்னியர், எம். ஏ., பி.எல்.,**

வழக்கறிஞர், 15, பூக்கார இரண்டாந்தெரு, தஞ்சாவூர்-1. முன்னாள் துணைத்தமிழ்ப் பேராசிரியர், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் கலைக் கல்லூரி. மேலநீலித நல்லூர்; பேராசிரியர்/ சிறப்பாய்வாளர், மொழி பெயர்ப்புத்துறை, சட்டத்துறைப் பதிப்பாசிரியர், வாழ்வியற் கலைக் களஞ்சியம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.


## முன்னுரை

சோழர்கள், கள்வர் [கள்ளர்] இனத்தைச் சார்ந்தவர்கள் என்பது வரலாற்றாய்வாளர்கள் பலரும் ஏற்றுக் கொண்ட ஒன்றாகும்.

தமிழகத்தில் சில சாதியார், சோழருக்குள்ள சிறப்பைக் கண்டு, வரலாற்றுப் புரட்டின் அடிப்படையில் மாமன்னன் முதலாம் இராசராச சோழனை அவர்களின் இனத்தவன் என்று பொய்ப்பிரசாரம் செய்து வருகிறார்கள். அந்தப் பொய்ப்பிரசாரத்தை இடுப்பொடிய செய்யவே இந்த நூல் என்னால் படைக்கப்பட்டுள்ளது.

இஃது ஓர் உலகயல் கற்பனையில் எழுதப்பட்ட நூலன்று; முழுக்க முழுக்க உண்மை வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டதாகும்.

இந்த நூல் வெளிவர, தர்மாம்பாள், இராமசாமி சேதிராயர் நினைவு கல்வி அறக்கட்டளையின் சார்பில் நிதியுதவி நல்கிட்ட அன்பு அண்ணன், வழக்கறிஞர், தமிழ்நாடு பார்கவுன்சில் உறுப்பினர் திரு. இரா. பெருமாள் சேதிராயர் அவர்கட்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

**புலமை வேங்கடாசலம் வன்னியர்.**

# சோழர்கள் கள்ளர்கள்

**சோழர், சோழநாடு பெயர்க்காரணம் :** 'சோலா < சோரா, கள்வன் — பண்டார்கர் 1 என்ற குறிப்பின்படி சோழர் சோழநாடு என்பன கள்வர் (கள்ளர்) என்ற சொற்பொருளின் அடியாகப் பிறந்ததாகும்.

**சோழர்கள் கள்ளர் இனத்தவர் என்பதற்கு வரலாற்றாய்வாளர்கள் தரும் சான்றுகள் :** மேன்மை பொருந்திய அரித்துவார மங்கலச் செல்வச்சீமான் வா. கோபாலசாமி ரகுநாத இராசாளியார் அவர்கள் இந்திரகுலாதிபர் சங்கத்தின் நான்காவது ஆண்டு விழாவில் தலைவராக அமர்ந்து செய்த விரிவுரையில்,

"இந்நாட்டையாண்ட அரசர் பெருமக்களுள் சோழரைக் கள்ளர் எனவே டாக்டர் பர்னலும், வெங்காசாமிராவ் அவர்களும் குறிப்பிட்டுள்ளார்கள்'. என்கிறார்.

'திருவாளர் ம. சீனிவாசையங்கார் அவர்கள், செந்தமிழ், தொகுதி-2, பக்கம் 175-இல் 'சோழரைச் சாதியிற் கள்ளர் என்பார் ஒரு சாரார்' என்கிறார்.

சோழரிற் சிலருக்குக் கள்ளரினத்தவர்களின் பட்டப்பெயர்களான 'கோனேரிமேல் கொண்டார்' 2 'சோழங்கர்'3, 'சோழங்கதேவர், 'சோழங்கதேவ அம்பலகாரர், 'சோழகர்', 'நாடாள்வான்

'நாடாழ்வார்' ஆகியன இருப்பதையடுத்து, திரு. ந. மு வேங்கடசாமி நாட்டார் அவர்கள் சோழரைக் கள்ளரினத்தவர் என்பார் 4.

**சோழர் பட்டப் பெயர்களும் கள்ளர் பட்டப் பெயர்களும் :** கிள்ளி, கோழி, கோழியர், சூரியன், சென்னி, செம்பியன், சோழகோன். தொண்டியோர், மால், வளவன் என்பன சோழ மன்னர்களுக்குரிய பட்டப்பெயர்கள் பலவற்றுள் சிலவாகும். (சங்ககாலச் சிறப்புப் பெயர்கள், பக்கம் 234, டாக்டர். மொ. அ. துரை, அரங்கசாமி, பாரிநிலையம், சென்னை).

இதில் **கிள்ளி** என்னும் பட்டப் பெயர் கள்ளரினத்தில் காணப்படும் கிள்ளியார், கிள்ளிநாடர் (கிளி நாடர்), கிள்ளியாண்டார் (கிளியாண்டார், கிளியண்டார், கிளிப்பாண்டார்), கிள்ளிகண்டார் (கிளிகண்டார்), கிள்ளி கொண்டார் (கிளி கொண்டார்), கிள்ளிராயர் (கிளிராயர்) என்னும் பட்டப் பெயர்களுடனும்,

**கோழி, கோழியர்** என்னும் பட்டப் பெயர்கள், கோழயர், கோழியர், கோழிராயர் என்னும் பட்டப்பெயர்களுடனும்,

**சூரியன்** என்னும் பட்டப் பெயர் சூரயர் (சொறியர்), சூரியர் என்னும் பட்டப் பெயர்களுடனும்,

**சென்னி** என்னும் பட்டப் பெயர், சென்னி கொண்டார், சென்னித்தலைவர், சென்னி நாடர் (சேனைநாடர்) என்னும் பட்டப் பெயர்களுடனும்,

**செம்பியன்** என்னும் பட்டப் பெயர், செம்பியத்தரசு, செம்பியதரையர், செம்பியப் பிரியர் (செம்பிலியர், செம்பிழியர்)என்னும் பட்டப் பெயர்களுடனும்,

**சோழகோன்** என்னும் பட்டப் பெயர், சோழகர் என்னும் பட்டப் பெயருடனும்,

**தொண்டியோர்** என்னும் பட்டப் பெயர், துண்டுராயர், துண்டிராயர் என்னும் பட்டப் பெயர்களுடனும்,

**மால்** என்னும் பட்டப் பெயர் மால் என்னும் பட்டப் பெயருடனும்,

**வளவன்** என்னும் பட்டப் பெயர் வளவர் என்னும் பட்டப் பெயருடனும் தொடர்புடையதாகும்.

**கிள்ளி பெயர்க்காரணம்** நிலத்தைக் கிள்ளி உழுததால், அல்லது சோழப் பெருங்குடியின் மற்றொரு கிளைக் குடியினராக இருந்ததினால், அல்லது பகைவர்களைத் தொடக்கத்திலேயே கிள்ளியெறிந்த வீரச் செயல்களினால், அல்லது கிளை அல்லது கிளி (கிள்ளை) இக் குடியினரது சின்னமாக இருந்ததினால், சோழர்க்கு கிள்ளி என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாமென வரலாற்றாய்வாளர்கள் உரைக்கின்றார்கள் (- சங்ககாலச் சிறப்புப்பெயர்கள், பக்கம். 230).

**கோழி, கோழியர் பெயர்க் காரணம் :** "சோழர்களின் அரசன் (கரிகால் சோழன் அல்லது விவராதித்த சோழன்) யானை மேல் ஏறித் தலைநகர் அமைத்தற்கான நல்லதோர் இடத்தைத் தேடிப் புறப்பட்டான். வழியில் அவனுடைய வலிமை மிகுந்த யானையைக் கோழியொன்று அஞ்சா நெஞ்சுடன் தாக்கியது. யானை புறங்காட்டி நின்றது. அது கண்ட அரசன் அந்த இடத்திற்கு இருந்த தெய்வீக சக்திதான் கோழிக்கு யானையையும் வெல்லும் ஆற்றலைக் கொடுத்தது என்று எண்ணி, அவ்விடத்திலேயே தன் தலைநகரை அமைத்துக் கொண்டான். அன்றிலிருந்து, வெற்றி கண்ட கோழியின் நினைவாக அவ்வூருக்குக் கோழியூர் அல்லது கோழி என்ற பெயர் வழங்கத் தொடங்கியது. (- சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார், அரும்பத உரைகாரர்.)

அந்நகரில் வாழ்த்த மக்கள் கோழியர் என்று அழைக்கப் பெற்றனர். சில சமயங்களில் அரசன் 'கோழி' (புறநானூறு, பாடல் 67) கோழியர்கோ, கோழிவேந்தன் என்றழைக்கப்பட்டான்.

"சீரான் மல்குதில்லைச் செம்பொனம் பலத்தாடி தன்னைக்
காரார் சோலைக் கோழிவேந்தன் தஞ்சையர்கோன் கலந்த
ஆரா வின்சொற் கண்டராதித்தன் அருந்தமிழ் மாலை வல்லார்
பேராவுலகிற் பெருமை யோடும் பேரின்பம் எய்துவரே".
(- கண்டராதித்தர் திருவிசைப்பா, கோயிற் பதிகம், பா. 10]

கோழியர் என்பதே காலப் போக்கில் சோழியர் — சோழர் எனப் பட்டது என்ற ஒரு வரலாற்றுக் குறிப்பும் உள்ளது.

**சூரியன் பெயர்க்காரணம் :** சோழர்கள் சூரிய குலத்தவ ராக — சூரியனை முதல்வனாக உடைய குலத்தில் தோன்றியவ ராகக் கருதப்படுதலின் சூரியன் என்ற பெயர் சோழனுக்கு வழங்கியது.

**சென்னி பெயர்க்காரணம் :** சென்னி என்பதற்குத் தலை அல்லது முடி என்பது பொருளாகும். மற்றவர்களுக்கு வணங் காமல் நிமிர்ந்து நிற்கும் தலை அல்லது முடியையுடையதால், சோழர்கள் சென்னி என்னும் பட்டப் பெயரைச் சூட்டிக் கொண் டார்கள்.

"சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி" (- புற நானூறு, 4 : 266), "சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி" (- புறநானூறு, 370, 378), "சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி" (- புறநானூறு 10) ஆகியோர் சென்னி என்னும் பட்டப் பெயருடைய சோழ மன்னர்களாவார்கள்.

**செம்பியன் பெயர்க்காரணம் :** சோழர்கள் சிபிச்சக்கர வர்த்தியின் வழித் தோன்றலான செம்பியன் என்னும் மன்னனின் மரபினராதலால், செம்பியன் என்னும் பட்டப் பெயரைப் பெற் றார்கள்.

**சோழகோன் பெயர்க்காரணம் :** சாசனங்களில் சோழ கோன்' என்னுஞ் சொல் சோழர்களைக் குறிப்பதாக உள்ளது.

சோழகோன் என்பது சோழகன் எனத்திரிந்து பன்மையில் சோழகர் என்றாயிற்று என்பார். திரு, ந. மு வேங்கடசாமி நாட்டார் அவர்கள்.

**தொண்டியோர் பெயர்க்காரணம் :** மேலைக் கடற் கரையில் தொண்டி என்னும் நகரம் இருந்தது போல், கீழைக் கடற் கரையிலும் தொண்டி என்னும் நகரம் இருந்தது. கீழைக் கடற்கரையிலுள்ள தொண்டி நகரத்திற்குரியவரான சோழர்கள் தொண்டியோர் எனப்பட்டார்கள்

**மால் பெயர்க்காரணம் :** மால் என்பதற்குப் பெரியவன் அல்லது வியத்தற்குரியவன் என்பது பொருளாகும். காத்தற் கடவுளான திருமாலை அச்சொல் குறிக்கிறது. மன்னர்களும் நிலத்தையும் உயிர்களையும் காப்பவராதலின், அவர்கள் நிலவுலகில் திருமாலின் பிரதிநிதிகளாகக் கருதப்படுகிறார்கள். 'ஓர் இடத்திற்குத் தலைவன்' என்ற பொருளில் 'மால்' என்ற சொல் தமிழில் வழங்கி வந்திருக்கிறது. நற்றிணை 81-ஆம் பாடலில் அகம் பன்மால் என வருதல் காண்க.

கள்ளர் கருமை நிறத்தவர் ; சோழரும் கருமை நிறத்தவராதலால், சோழர் தம்மை மால் என அழைத்துக் கொண்டார்களென அரித்துவார மங்கலம் சீமான் வா. கோபாலசாமி ரகுநாத இராசாளியார் அவர்கள் உரைப்பர்.

"கள்வனென் கிளவி கரியோ னென்ப" எனத் திவாகரமும் கடகரிப் பெயரும் கருநிற மகனும், கர்க்கடக விராசியும் ஞெண்டும் கள்வன்" எனப் பிங்கலந்தையும் உரைக்கின்றது.

**சோழர் கருமை நிறத்தவர் என்பது பற்றிக்கர்னல் ஜெரினி தரும் செய்திகள் :** 'கால' என்னும் வடமொழிச்

சொல்லுக்குக் 'கறுமை' என்பது பொருளாகும். ஆரியர்களுக்கு முன் தென்னாட்டில் வாழ்ந்த கறுப்பு நிற மக்களைக் குறிக்கும் 'கோல் என்ற சொல்லிலிருந்து 'சோழர்' என்ற சொல் தோன்றிற்று [- Gerini – Researches, பக். 85, 101–3 வரை].

**வளவன் பெயர்க்காரணம் :** வளநாட்டின் தலைவன் என்பது வளவன் என்ற சொல்லின் பொருளாகும். காவிரியாற்றின் கழிமுகத்துறையிலுள்ள வளமுடைய நெல் வயல்களுக்குத் தலைவன் என்ற பொருளில் வளவன் சோழர்கட்குப் பட்டப் பெயராயிற்று. மாவளத்தான் [–புறநானூறு 43, 44], திருமாவளவன் (பட்டினப் பாலை, 299], கரிகால் வளவன் [அகநானூறு 55:10, பொருநராற்றுப் படை 148 : புறநானூறு 66 : 3] என்ற பெயர்களும் உள்ளன. கிள்ளிவளவன் [புறநானூறு 70: 10; 346 22 ; 399 : 13] என்பது சோழ மன்னன் ஒருவனுடைய பெயர்.

**சோழ மன்னர்களின் சிறப்புப் பெயர்களும் கள்ளர் பட்டப் பெயர்களும்** சோழ மன்னர்களில் **கண்டராதித்த சோழன் 5, அரிஞ்சய சோழன் 6, இரண்டாம் பராந்தகளாகிய சுந்தரசோழன் 7, உத்தமசோழன் 8, முதல் இராசராசசோழன் 9, முதல். இராசேந்திரசோழன் 10, இரண்டாம் இராசேந்திரசோழன் 11, வீரராசேந்திர சோழன் 12 அதிராசேந்திர சோழன் 13 குலோத் துங்க சோழன் 14** ஆகியோர் தேவர் என்னும் பெயரையும்,

முதல் இராசராச சோழன், அருண்மொழிவர்மன், அருண் மொழித் தேவன், இராச கண்டியன், உய்யக் கொண்டான். தேவர், கேரளாந்தகன், சிங்களாந்தகன் என்னும் பெயர்களையும்,

முதல் இராசேந்திர சோழன், சீனத்தரையன், சேனாதி, சேனாதிபதி என்னும் பெயர்களையும்,

இராசாதிராச சோழன் செயங்கொண்டான், சயங்கொண்டான், சேங்கொண்டான், போரிற் கொளுத்தி, போரைக் கொளுத்தி என்னும் பெயர்களையும்,

அனபாய சோழன் என்றழைக்கப்பட்ட குலோத்துங்க சோழன், ஈழத்தரையன், ஈழங்கொண்டான், கோட்டைச் சுருட்டி, கோட்டை மீட்டான், முடி கொண்டான் என்னும் பெயர்களையும்,

இரண்டாம் இராசேந்திர சோழன் உத்தங்கொண்டார், உத்த முண்டார் என்னும் பெயர்களையும்,

இரண்டாம் இராசேந்திர சோழனின் மகன்களில் ஒருவன் சோழகன்ன குச்சிராயன் என்னும் பெயரையும்,

மதுராந்தக சோழன், சோழங்கர் என்னும் பெயரையும்,

மூன்றாம் குலோத்துங்க சோழன், சோழ கேரள தேவன், சோழ பாண்டியன், கோனேரி மேற்கொண்டான் என்னும் பெயர்களையும்,

விக்கிரமசோழன், கோனேரி மேற்கொண்டான் என்னும் பெயரையும்,

இராசமகேந்திர சோழன், கொல்லத்தரையன் என்னும் பெயரையும் சிறப்புப் பெயர்களாகக் கொண்டிருந்ததை, கள்ளர்கள், தேவர் அருண்மொழித் தேவர், அருமொழித்தேவர் உய்யக்கொண்டார், கண்டியர், கேரளாந்தகர், வர்மர், சிங்களாந்தகர், சீனத்தரையர், சேனாதியார், சேனாதிபதியார், செயங்கொண்டார், சயங்கொண்டார், சேங்கொண்டார், போரிற் கொளுத்தியார், போரைக் கொளுத்தியார், ஈழத்தரையர், ஈழத்திரையர், ஈழங்கொண்டார், கோட்டை சுருட்டியார், கொட்டையுண்டார் [கோட்டை கொண்டார், கோட்டையாண்டார்], கோட்டை மீட்டார், முடி கொண்டார், முடிபூண்டார், உத்தங்கொண்டார், உத்தமங்கொண்டார், உத்தமாண்டார், உத்தமண்டார், உத்தமுண்டார், உத்தமப் பிரியர், உத்தப் பிரியர், யுத்தப் பிரியர், கன்னகுச்சிராயர், சோழங்கர், சோழங்கதேவர், சோழங்கதேவ அம்பலகாரர், சோழகேரளர், சோழயாண்டியர், மேற்கொண்டார், கொல்லத்தரையர் என்னும் பட்டப் பெயர்களாகக் கொண்டுள்ளார்கள்.

**சோழ மன்னர்களின் மண உறவு :** சோழ மன்னர்களில் விசயாலய சோழன், தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், ஆவூருக்கு அருகில் உள்ள ஊத்துக்காடு என்னும் ஊரில் கள்ளரினத்தில் மழவராயர் என்னும் பட்டப்பெயருடையோர் குடும்பம் ஒன்றில் மண உறவு கொண்டிருந்தான்.

விசயாலய சோழனின் மகன் முதல் ஆதித்தசோழன் கள்ளரினத்தில் வல்லவரையர் என்னும் பட்டப் பெயருடையோர் குடும்பத்தைச் சேர்ந்த இளங்கோப்பிச்சி என்பவளையும் E. P. Ind. Vol. XXVI, PP. 233 & 234].

முதல் ஆதித்த சோழனின் மகன் கன்னரதேவன், கள்ளரினத்தில் கொடும்புரார் என்னும் பட்டப் பெயருடைய கொடும்பாளூரிலிருந்த குறுநில மன்னன் ஒருவன் மகளாகிய பூதிமாதேவ அடிகள் [- S. I. I, Vol. VIII. No 665 என்பவளையும்,

முதல் பராந்தக சோழன், கள்ளரினத்தில் பழுவேட்டரையர் என்னும் பட்டப் பெயருடையோர் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தியையும் [- அன்பில் செப்பேடு, E. P. Ind, Vol. XV. No. 5].

கண்டராதித்த சோழன் கள்ளரினத்தில் மழவராயர் என்னும் பட்டப் பெயருடையோர் குடும்பத்தில் பிறந்த செம்பியன் மாதேவி என்பவளையும் ["மழவரையர் மகளார் ஸ்ரீ கண்டராதித்தப் பெருமாள் தேவியார் செம்பியன் மாதேவியார்" -S. I. I. Vol. III, No 141].

அரிஞ்சயசோழன், கள்ளரினத்தில் வைதும்பராயர் என்னும் பட்டப்பெயருடையோர் குடும்பத்தில் பிறந்த கல்யாணி என்பவளையும், கொடும்புரார் [கொடும்பாளூர் அரையர்] என்னும் பட்டப் பெயருடையோர் குடும்பத்தில் பிறந்த பூதி ஆதித்த பிடாரி என்பவளையும் [The Colas, இரண்டாம் பதிப்பு, பக்கம்-152].

இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரசோழன், கள்ளரினத்தில்

மலையமான் அல்லது சேதிராயர் [சேதுராயர், சேதுரார்] என்னும் பட்டப் பெயருடையோர் குடும்பத்தில் பிறந்த வானவன்மாதேவி ["வானவன்மாதேவி திருக்கோவிலூரிலிருந்த மலையமனாட்டுச் சிற்றரசன் ஒருவனின் மகளாவாள்". – S. I. I. Vol. VII. No 863. "தென்ஆர்க்காடு மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியை ஆண்ட சேதிராயர் [சேதுராயர். சேதுரார்] மலையமான்கள் எனவும் பட்டார்கள்". – பெரியபுராண ஆராய்ச்சி, டாக்டர் மா. இராச மாணிக்கனார், பக்கம்-74] என்பவளையும்,

உத்தமசோழன், கள்ளரினத்தில் மழபாடியார் [மழு வாடியார்] என்னும் பட்டப் பெயருடையோர் குடும்பத்தில் பிறந்த மழபாடித் தென்னவன் மாதேவி என்பவளையும், இருங்களார் என்னும் பட்டப் பெயருடையோர் குடும்பத்தில் பிறந்த இருங்கோளர் மகள் வானவன் மாதேவி என்பவளையும், விழுப்பரையர் பட்டப்பெயருடையோர் குடும்பத்தில் பிறந்த கிழானடிகள் (Ins. 494 of 1925 ; Ins 298 of 1908) என்பவளையும்,

மாமன்னன் முதல் இராசராச சோழன், கள்ளரினத்தில் பழுவேட்டரையர் என்னும் பட்டப்பெயருடையோர் குடும்பத்தைச் சேர்ந்த பஞ்சவன் மாதேவி என்பவளையும் மணந்தார்கள்.

**பழுவேட்டரையர் வரலாறு :** தெற்கே ஈழ நாட்டிலிருந்து வடக்கே கலிங்கநாடு வரையில் அண்ணன், தம்பிகளான பெரிய பழுவேட்டரையர், சின்னப் பழுவேட்டரையர் என்பவர்களுடைய பெயர்கள் பிரசித்தமாயிருந்தன. உறையூருக்குப் பக்கத்தில் வடகாவேரியின் (கொள்ளிடம்) வடகரையில் உள்ள பழுவூர் அவர்களுடைய நகரம். விஜயாலய சோழன் காலத்திலிருந்து பழுவேட்டரையர் குலம் வீரப்புகழ் பெற்றிருந்தது. அக்குடும்பத்தார் சோழ மன்னர் குடும்பத்துடன் கொள்வினை - கொடுப்பினை செய்து வந்தனர். இது காரணமாகவும் அவர்களுடைய குலத் தொன்மை, வீரப்புகழ் இவை காரணமாகவும் பழுவேட்டரையர் குலம் அரச குலத்தின் சிறப்புக்கள் எல்லாம் பெற்றிருந்தது. தனியாகக் கொடி போட்டுக் கொள்ளும் உரிமையும் அக்குலத்துக்கு உண்டு.

பழுவேட்டரையர் இருவரில் மூத்தவர், அவருடைய காலத்தில் அவருக்கு இணையான வீரர் சோழ நாட்டில் யாருமில்லை என்று புகழ் பெற்றவர். சோழ நாட்டு அரசாங்கத்தில் மிக உன்னதமான பல பதவிகளை வகித்தவர். சோழ சாம்ராஜ்யத்தின் தனாதிகாரி, தான்யாதிகாரி, தன பண்டாரமும் தான்ய பண்டாரமும் அவருடைய அதிகாரத்தில் இருந்தன. அரசியலில் தேவைக்குத் தகுந்தபடி இறைவிதித்து வசூலிக்கும் அதிகாரம் அவரிடம் இருந்தது. எந்தச் சிற்றரசரையும், கோட்டத்தலைவரையும், பெரியகுடித்தனக்காரரையும், "இவ்வாண்டு இவ்வளவு இறைதர வேண்டும்" என்று கட்டளையிட்டு வசூலிக்கும் உரிமை அவருக்கு இருந்தது. ஆகவே சுந்தர சோழ மகாராஜாவுக்கு அடுத்தபடியாகச் சோழ சாம்ராஜ்யத்தில் வலிமை மிக்கவர் பழுவேட்டரையர் தான்".

பெரிய பழுவேட்டரையர்,

"மாறபாண்டின் படையை வீறு கொண்டு தாக்கி வேரோடு அறுத்தவர்: இருபத்துநான்கு போர்களில் சண்டையிட்டு, அறுபத்து நான்கு விழுப்புண்களைப் பெற்ற திருமேனியர். சோழநாட்டுத் தானாதிகாரி, தானிய பண்டார நாயகர், இறைவிதிக்கும் தேவர் பெரிய பழுவேட்டரையர்" என்கிறார் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

[— பொன்னியின் செல்வன், முதல் பாகம், கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி.]

**இராசராச சோழர்கள் :** சோழர்கள் சரித்திரத்தில் இராசராச சோழன் என்னும் பெயரில் நான்கு மன்னர்கள் காணப்படுகிறார்கள்.

முதலாமவர் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய மாமன்னன் முதல் இராசராச சோழன் [கி. பி. 985-1014], ஆவார்;

இரண்டாமவர், மேலைச் சாளுக்கியரை வெற்றிகண்டு, கல்யாணபுரத்தில் இருந்து துவாரபாலகர் சிலையைக் கொண்டு வந்த

விஜயராஜேந்திர சோழன் என்னும் இரண்டாம் இராஜராஜ சோழன் [கி பி. 1148-1163] ஆவார்.

மூன்றாமவர், மூன்றாம் இராசராச சோழன் [கி. பி. 1216-1256] ஆவார்.

நான்காமவர், கரிகாற் பெருவளவ சோழனின் மகனரான இராச ராச சோழன் [கோவிராசகேசரி] ஆவார்.

**இராசராச சோழன் (கோவிராசகேசரி) பற்றி திரு. எம். சுவாமிநாத மாதவராயர் தரும் வரலாற்றுக் குறிப்புகள் :** "கரிகாற் பெருவளவ சோழனுக்கு மகனாக கலிகால முதலில் வந்தவன் ; கிழக்கே கடலையும், தெற்கே (வெள்ளாற்றின் தென்பாலுள்ள) திருமய்ய மலையையும், மேற்கே கருவூர்க் கோட் டைக் கரையையும், வடக்கே பெண்ணையாற்றையும் எல்லைகளாகக் கொண்ட இருபத்து நான்கு காதத்துக்கு தந்தையால் முடி சூட்டப் பெற்றவன்.

"கடல் கிழக்குத் தெற்குக் கரைபுரளும் வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம் - வடதிசையில்
ஏணாட்டுப் பெண்ணை யிருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்."

என்று பழைய தனிப்பாடல் கூறுகிறது.

உறையூரை இராசதானியாகக் கொண்டவன் ; முல்லை நில மாக்கள் மரபில் வந்த "உலகுடைய முக்கோக் கிழானடிகள்" என்னும் பெண்ணரசியை மணஞ்செய்து கொண்டு அவள் சுற்றத் தாருக்கு "கள்ளரிடையர்" என்னும் பட்டங்கொடுத்தவன்; மகா ராசபுரம் என்னும் ஊர்களையுண்டாக்கினவன் ; தஞ்சாவூரிலும், மன்னார் குடியிலும் இராசகோபால சுவாமி கோவில் கட்டினவன்; இவன் பெயர் "கோபாலன்" எனவும் வழங்கும், இவன் மரபோர்க்கு "கோபாலர்" என்னும் பட்டப் பெயர்கள் வழங்குகிறது.

கடல்சூழ்ந்த பாரேழுந் திசையெட்டுங் காத்துநின்று
தடமாமதி யெனவிளங்கித் தரளவெண்டுடை நிலாவெறிப்ப
வாழ்வரை வரப்பாக வடற்கலியைப் பிலத்தொதுக்கி
யூழிதொறும் புகழோங்க வோராழி வெயிற் பரப்பக்
கயல்சிலையி லாரிள்வரைய கன்றாளயிற் கரங்குவிப்பப்
புயலாழியிற் போற்றிசெயப் புலிமேருவில் வீற்றிருப்ப
திருவாணையுஞ் செங்கோலுந் திசையெட்டுங் காவல்கொளப்
பெருவாழ்வுபெற்றுயானைத்தும்பி .........
சமையமாறுந் தலையெடுப்பத் தருமமு மருமறையுமோங்கி
யமைவில்லா மனுவொழுக்க மாதியாம்பாடி நிலைநிற்க
ஓர்ப்பினுந்தம் முறுகனவிலு மொன்றொடொன்று
பகையின்றிப்
போர்ப்புலியும் புல்வாயும் புக்கொருதுறை நீருண்ணப்
பொன்னிநதியும் பொய்யாது பாயலும்புன லார்வாது
மன்னியநிதி வளம்பெருக்க விளைவயலெவ் வளஞ்சுரக்கப்
போகபூமி யிதுவென்னப் போகமெல்லாம் வந்தீண்டி
யேகவாணை யரசுரிமைப் வேழ்பொழில்களும் பெற்றதென்னப்
பாற்கடலிற் கார்க்கடலிப் படிவாழ முடிசூடி
யார்த்த வமராபிடேகத்தி லரசர் திளைத்தோட
வெவ்வுலகமு மிருணீங்க வந்தகோமா னிவனென்று
கவ்வைதீரக் கலிகாலத் தாதிகாலங் காட்டினனெ
விவன்காக்கும் புவியனைத்தும் யாவையு நினைத்தின்றருளி
யவன்காக்கு மெனவகில லோகங்களு மடியடையக்
குலைபடுவன தெங்குகளே கோட்படுவன விளங்கமுதே
யலை படுவன நீர்நிலையே யதிர்படுவன விடியேறே
தளம்படிவன போர்வரம்பே தடைபடுவன கோபுரமே
யுளம்படுவன சூன்மகளிரே யொறுப்புனைவன மதகளிறே
தடுப்புண்பன கோட்டகமே தள்ளுண்பன பூங்கொடியே
கறைபடுவது நிறைமதியே ......
பட்டுண்பன வணியல்குலே பறித்தாற்றுவ பரியாகமே

குறைபடுவன குழல் சுருளே குழைவில்லன மணிக்
கெங்கையே
மறைபடுவன சூழ்காஞ்சியே மங்கொள்வனக் கிடையே
யென்றுபாடிப் பார்வேந்த ரிளங்கற்றின் மேற்போகச்
சென்றிறைஞ்சிப் பார்வேந்தர் திருவாசற் புறநிற்ப
சேரலருந் தென்னவரும் சிங்களருங் கொங்கணரும்
பேரரசு பெற வேண்டிப் பிரியாது சேவிப்பத்
தம்மரசு தாம் பெற்றுத் தம்முடனே முடிசூடி
யிரு மருங்குந் தேவியர்க ளணிமங்கலம் பெற்றருள
வாளரசர் தலைகாக்க யாதவகுல மரபில் வந்த
[வளவசோழ
குலமாணிக்க மட நாண்முதற் கண நான்கின் வடிவு
கொண்டு
னுடனாணையுந்திருவாணையுமுடன் செல்ல முடி
கவித்தான்
மண்ணரசர் வந்திறைஞ்ச மகுடம்புனை வளவனுடன்
பெண்ணரசும் பெருந்தாயமும் பெற்றருளும் பெண்பெருமா
ளுறையூரும் பேருரகையு முதகையுமது ராபுரியு
முறைமுறை யாண்டருளி முளரி நகர் துறந்த வன்னம்
பொன்னாசனஞ் சிங்கவணை பொலங் கற்பகப் பூஞ்சோலை
முன்னேவல் நிற்றல் முறைமுறையே பெறு முலைப்
பெருமா
ளளகறுதற் கயல்நயனத் தம்பொற்பூவைக் கொம்பென்ன
வுள மமிழ வந்தருளிய வுலகுடைமுக்கோக்கிழானடியுடன்
வாழி வாழி மணம்புணர்ந் தூழியூழி பல வோங்கிச்
செம்பொன் வீர சிங்காசனத்துலகுடை முக்கோக்கிழானடி
களோடும்
வீற்றிருந்தருளிய கோவிராச கேசரி வன்மரான
திரிபுவனச் சக்ரவர்த்திகள் ராச ராச தேவர்க்கு யாண்டு"-
என்று கல்வெட்டு [கட்டுரை] கூறுகிறது.

[இவன் மரபோர்களில் பெருந்தன்மையுடையோர் கள்ளரிடை

யருடைய சாதி நியாயங்களை தீர்த்துவிடுகிறதென்றும் அதற்காக அவர்கள் தலைக்கட்டுக்கு இரண்டரையனா வீதம் அறச்சிலவுக்குக் கொடுக்கிற தென்றும் ஒரு வுடன்படிக்கை ஏற்பட்டிருப்பதாகவும், அந்தப்படி மதுக்கூர், சிங்கவனம் பாளையதாரர்கள் தீர்த்துவிடுகிற தாகவும் தெரிகிறது ]

(- History of the Kallas of the solar. viz. veles, Nahas, cholas & pallavas, பக்கம்-142-144, M. Swaminatha Mathavarayar.)



# கள்ளரின மன்னன் இராசராச சோழன்

## முதலாம் இராசராச சோழன்

மாமன்னன் முதலாம் இராசராசசோழன் கள்ளரினத்தைச் சார்ந்தவன் என்பதற்குச் சோழர் காலத்துக் கல்வெட்டுக்களே சான்றுகளாக அமைகின்றன. தஞ்சையிலும் மற்றும் தமிழகத்தின் பிற பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்ட சோழர்களின் கல்வெட்டுக்கள் பலவற்றில் இராசராச சோழன் கள்ளரின மன்னன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளான்.

**இராசராச சோழனின் இயற்பெயரும் சிறப்புப் பெயர்களும் கள்ளரினப் பட்டப் பெயர்களுடன் பொருந்துதல் :** இராசராச சோழனின் இயற்பெயரான அருண் மொழித்தேவன் என்னும் பெயரில், கள்ளரினத்தில் **அருமொழித் தேவர்** என்னும் பட்டப் பெயரும், இராசராச சோழனின் சிறப்புப் பெயர்களான **இராசன் கண்டியன், உய்யக்கொண்டான்,** கேரளாந் தகன், சயங்கொண்டான், சிங்களாந்தகன், தெலுங்கு குலகாலன், நாட்டான், நாட்டரையன், மும்முடிச் சோழன் என்னும் பெயர் களில், கள்ளரினத்தில், **கண்டியர், உய்யக் கொண்டார்,** கேரளாந் தகர், சயங்கொண்டார், சிங்களாந்தகர், தெலிங்கதேவர், தெலிங்க ராயர், தெலுங்கராயர், நாட்டார், நாட்டரையர், மும்முடியர், மும் முடியார் என்னும் பட்டப் பெயர்களும் இருப்பதையடுத்து, மாமன் னன் இராசராச சோழன் கள்ளரினத்தைத் தவிர வேறு இனத்து

மன்னனாக இருந்திடுவதற்கு வாய்ப்பில்லை என்பது தெற்றெனப் புலனாகிறது.

**தேவர் பட்டப் பெயரும் இராசராச சோழனும் :** கள்ளர் பட்டப் பெயர்கள் பலவற்றுள் தேவர் பட்டப்பெயர் என்பதும் ஒன்றாகும். இந்தப் பட்டப் பெயரை இராசராச சோழன் பெற்றிருந்தமையைக் கல்வெட்டுக்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றன.

"உடையார் சீராசராச தேவர் நம்பிராட்டியார் தந்தி சக்தி விடங்கியாரான ஸ்ரீ ஒலோக மாதேவியார் வடகரை இராசேந்திரசிங்க வளநாட்டுப் பொய்கை நாட்டுத் திருவையாற்றுப்பால் நாம் எடுப்பித்த திருக்கற்றளி ஒலோகமாதேவீஸ்வரம் உடைய மகாதேவர்க்கும் ஒலோக விடங்க தேவருள்ளிட்ட திருமேனிகளுக்கும் செய்வித்த பொற்கொள்கை முதலிய உள்ள திருவா பரணங்களும் திருப்பரி கலங்களும் கல்லிலே வெட்டுவிக்க என்று" S. I. I. Vol. V. No, 521.

"ஸ்ரீ இராஜராஜ தேவர்க்குத் திருமந்திர ஓலையெழுதும் அருமொழிதேவ வளநாட்டு இங்கண் நாட்டு இராஜகேசரி நல்லூர் கிழவன் காறாயில் எடுத்த." S. I. I. Vol. II, No. 27.

முதல் கல்வெட்டில் காணப்படும் உடையார் என்னுஞ் சொல் சாதியைக் குறிப்பதன்று. மரியாதை நிமித்தமாகக் குறிக்கப்பெற்ற சொல்லாகும்.

**உடையார்** - மரியாதை மொழி ; கடவுள், அரசர், குரு இவர்கள் பெயர்களின் முன் இம் மொழியை அமைத்துக் கூறுவது பண்டைய மரபு" என்கிறார் கல்வெட்டியல் ஆராய்ச்சி அறிஞர் சுந்தரேச வாண்டையார் அவர்கள்.

**அருமொழி தேவன் என்னும் பெயரிலமைந்த ஊர்களும் வளநாடுகளும் :** இராசராச சோழன் காலத்திலிருந்த வளநாடுகள் பலவற்றுள் அருமொழி தேவ வளநாடு என்பதும் ஒன்றாகும்.

**அருமொழி தேவ வளநாட்டு** நென்மலி நாட்டுப் பருத்திக் குடியிலிருந்த வேளான் உத்தம சோழனாகிய மதுராந்தக மூவேந்த வேளான், இராசராச சோழனிடத்தில் திருமந்திர ஓலை நாயகமாக இருந்தானென ஆனைமங்கலச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. — E. P. Ind. Vol. XXII., No. 34.

**அருமொழித் தேவன் என்ற பெயரிலுள்ள ஊர்கள் :** பாண்டி மண்டலத்தைச் சேர்ந்த கானநாட்டில் அருமொழித் தேவபுரம் என்னும் பெயருடைய ஊர் ஒன்று இருந்ததாக சாசனம் அறிவிக்கின்றது. [- 255 of 1914] ; மயிலாடுதுறை வட்டத்தில் அருமொழித் தேவன் என்ற பெயருடைய இரண்டு ஊர்களும், நாகப்பட்டின வட்டத்தில் ஓர் அருமொழித் தேவனும். தென்–ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் ஓர் அருமொழித் தேவனும் உள்ளன. [– தமிழகம் ஊரும்பேரும்; ரா. பி. சேதுப் பிள்ளை பக்கம்–156].

**உய்யக் கொண்டார் வளநாடு :** உய்யக் கொண்டார் என்னும் பெயரில் இராசராச சோழன் காலத்தில் ஒரு வளநாடு இருந்தது.

"அரிசிலுக்கும் காவிரிக்கும் நடுவான உய்யக் கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டுப்பள்ளிச் சந்தம் இறக்கின நெற்குப்பை அளந்தபடி நிலம்". [தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டு].

உய்யக்கொண்டார் பட்டப்பெயரில் சோழ நாட்டில் ஒரு வளநாடு இருந்து வந்ததுடன் கூட ஊர்கள், மலைகள், ஆறுகள் ஆகியனவும் அந்தப் பெயரில் இருந்து வருகின்றன. சோழநாட்டில் பாடல் பெற்ற பகுதிகளுள் ஒன்றாகிய கற்குடி என்பது உய்யக்கொண்டான் திருமலை என்றழைக்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளிக்கு அருகில் காவிரியாற்றினின்றும் கிளைத்துச் செல்லும் வாய்க்கால் உய்யக் கொண்டான் வாய்க்கால் என்றழைக்கப்படுகிறது.

**உய்யக் கொண்டார் பட்டப் பெயரிலுள்ள ஊர்கள்:**

வடஆர்க்காடு மாவட்டத்தில் உய்யக்கொண்டான் சோழபுரமும். இராமநாதபுரத்துத் திருப்பத்தூர் வட்டத்தில் உய்யக்கொண்டானும், தென்னார்க்காடு மாவட்டம், விருத்தாசலம் வடடத்தில் உய்யக் கொண்டானும், தென்னார்க்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டத் தில் உய்யக்கொண்டராவியும் உய்யக் கொண்டார் என்னும் பட்டப் பெயர்களில் அமைந்த ஊர்களாகும். [- தமிழகம் ஊரும் பேரும், ரா பி. சேதுப்பிள்ளை - பக், 121, 122].

**இராசராச சோழனின் தாய் வானவன் மாதேவி கள்ளரினத்துப் பெண்மணி என்பது :** இராசராச சோழ னின் தந்தை சுந்தர சோழனைப் [''பொன்மாளிகைத் துஞ்சின தேவர்'' S. I. I. Vol, 2, 5, 6,] போல் தாய் வானவன் மாதேவியும் கள்ளரினத்தைச் சார்ந்தவளாவாள். அவள் கள்ளரினத்தில் மலையமான் அல்லது சேதிராயர் [சேதுராயர், சேதுரார்] என்னும் பட்டப் பெயருடையோர் குடும்பத்தைச் சார்ந்தவளாவாள்.

'வானவன் மாதேவி திருக்கோவலூரிலிருந்த மலையமனாட்டுச் சிற்றரசன் ஒருவனின் மகளாவாள்'' என்பது கல்வெட்டுத் தரும் சான்றாகும். - S. I I Vol. VII No. 863.

சேதிராயர் [சேதுரார், சேதுராயர்] என்போர், தென் - ஆர்க்காடு கோட்டத்தின் வடமேற்குப் பகுதியை ஆண்டவர்கள் என்றும், அவர்கள் மலையமான்கள் எனவும் அழைக்கப்பட்டனர் என்றும் டாக்டர் மா. இராசமாணிக்கம் அவர்கள் குறிப்பிடுகின்றார், [- பெரியபுராண ஆராய்ச்சி, பக்கம்-74].

**இராசராச சோழன் மனைவி பஞ்சவன் மாதேவி கள்ளரினத்துப் பெண்மணி என்பது :** முதல் இராசராச சோழன் மனைவி பஞ்சவன் மாதேவி கள்ளரினத்தில் பழுவேட்ட ரையர் என்னும் பட்டப் பெயருடையோர் குடும்பத்தைச் சார்ந்த வளாவாள் [- பிற்காலச் சோழர் சரித்திரம், பகுதி I பக்கம்-141].

**இராசராச சோழனின் தமக்கை முதலாம் குந்தவையின் கணவன் வல்லவரையன் வந்தியதேவன் கள்ளரினத்தவன் என்பது :** வந்திய தேவன் கள்ளரினத்தவன் என்பது, அவனது இயற்பெயருடன் **வல்லவரையன்** என்னும் கள்ளரினப் பட்டப்பெயரும் இணைந்திருப்பதிலிருந்தே தெரிய வருகிறது.

சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதி **'வல்லவரையர் நாடு'** என்று அக்காலத்தில் வழங்கப்பட்டதாகக் கல்வெட்டுக்களில் குறிப்புகள் காணப்படுகின்றன.

வந்தியதேவன் காலத்தில்தான் சோழர்களால் வெட்டப்பட்ட வீரநாராயணன் ஏரியும் [வீரணம் ஏரி / வீராணத்து ஏரி] சோழ கங்கம் ஏரியும் சிறப்புற்று விளங்கின.

**வீரநாராயணன் ஏரி (வீராணத்து ஏரி, வீராணம் ஏரி) வரலாறு :** விசயாலய சோழனின் பேரனான முதற்பராந்தக சோழனின் காலத்தில் வடக்கே இரட்டை மண்டலத்து ராஷ்டிரகூட மன்னர்கள் வலிமைபெற்று விளங்கினார்கள். மானிய கேடத்திலிருந்து அவர்கள் வரக்கூடுமென்று பராந்தகன் எதிர்ப்பார்த்தான். எனவே, தனது முத்ற் புதல்வனாகிய இளவரசன் இராஜாதித்தனை ஒரு பெரிய சைன்யத்துடன் திருமுனைப்பாடி நாட்டில் இருக்கச் செய்தான். அந்தச் சைன்யத்தைச் சேர்ந்த இலட்சக் கணக்கான வீரர்கள் வேலையின்றிச் சும்மாயிருக்க நேர்ந்த காலத்தில் இராஜாதித்தன் ஒரு யோசனை செய்தான். குடிமக்களுக்கு உபயோகமான ஒரு பெரும் பணியை அவர்களைக் கொண்டு செய்விக்க எண்ணினான். வடகாவேரி என்று பக்தர்களாலும் கொள்ளிடம் என்று மற்றவர்களாலும் அழைக்கப்பட்ட பெருநதியின் வழியாக அளவில்லாத வெள்ள நீர் ஓடி வீணே கடலில் கலந்து கொண்டிருந்தது. அதில் ஒரு பகுதியைப் பயன்படுத்த எண்ணித் தன்வசமிருந்த வீரர்களைக் கொண்டு கடல் போன்ற விசாலமான ஏரி

ஒன்றை அமைத்தான், அதைத்தன் அருமைத் தந்தையின் பெயரால் வீரநாராயண ஏரி என்றழைத்தான்.

**சோழகங்கம் ஏரி :** முதல் இராசேந்திர சோழனால் கங்கை கொண்ட சோழபுரத்திற்கும் அருகில் வெட்டப்பட்டது. S. I. I. Vol. III. No. 205, verse 124]. சோழகங்கம் ஏரியை நீர்மய மான வெற்றித்தூண் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் உரைக்கின்றன. இக்காலத்தில் சோழகங்கம் ஏரி பொன்னேரி என்று வழங்கப்படுகிறது. தெற்கு வடக்கில் பதினாறுமைல் நீள முள்ள அவ்வேரி முற்காலத்தில் மிக உயரமான கரைகளையுடைய தாய்த் திருச்சிராப்பள்ளி, தென்னார்க்காடு மாவட்டங்களுக்குள் சில பகுதிகளைத் தன் நீர்வளத்தால் செழிப்பித்து நன்னிலையில் இருக்கும்படி செய்த பெருமையுடையதாகும். தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் இப்போது மிகப் பெரிய ஏரியாக வுள்ள வீரநாராயணன் ஏரி சோழகங்கம் என்னும் இவ்வேரிக்கு வடி காலாகவே இருந்தது. மாளவ தேசத்து மன்னனாகிய போசனால் வடநாட்டில் இரு குன்றுகளுக்கிடையில் அமைக்கப்பெற்ற போச புரத்து ஏரியினும் சோழ நாட்டில் மலைகளேயில்லாத நிலப்பரப்பில் மிக்க வலிமை வாய்ந்த பெருங்கரைகளுடன் சோழகங்கம் ஏரி அமைந்தது.

### இராசராச சோழன் ஆட்சியில் தஞ்சை நகர எல்லை:

1. கிழக்கு எல்லை — புன்னைநல்லூர் மாரியம்மன் கோயில்
2 மேற்கு எல்லை — வல்லம், களிமேடு.
3, வடக்கு எல்லை — விண்ணாறு (வெண்ணாறு)
4. தெற்கு எல்லை — நாஞ்சிக்கோட்டை தெரு.

**இராசராச சோழன் அரண்மனை :** வடக்கில் உள்ள விண்ணாற்றிலிருந்து [வெண்ணாற்றிலிருந்து] தெற்கே 4 கல் அளவும், கிழக்கிலும் மேற்கிலும் 3 கல் அளவும் கொண்ட நிலப் பரப்பில் இராசராச சோழன் அரண்மனையும் நகரும் அமைந் திருந்தது.

இதில் இராசராச சோழன் அரண்மனை மட்டும் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருந்தது. இதில் செம்பாதி அழிந்ததுபோக, 534 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள அரண்மனை மட்டுமே இப்போது உள்ளது. இந்த அரண்மனையை நாயக்கர் வமிசத்துக் கடைசி மன்னன் விஜயராகவ நாயக்கர் (கி. பி 1633–74) என்பவன் பிறப் பட்ட காலங்களில் புதுப்பித்தான்.

அரண்மனை 15 அடி உயர மதிலையும், 15 அடி ஆழ அகழி களையும் கொண்டதாகும். அகழிகள் அரண்மனை மற்றும் பெரிய கோயிலைச் சுற்றியிருந்தன. பின்னாளில் நகரக் குடியிருப்பு விரிந்து பரவியதன் காரணத்தால் அகழிகள் தூர்க்கப்பட்டும், மதில் பல இடங்களில் இடிக்கப்பட்டும் சிதைந்துபோயின.

தஞ்சைப் பெரியகோயிலை ஒட்டி தென்புறத்தில் இருந்த அகழி, புது ஆறு என்றழைக்கப்படும் கல்லணைக் கால்வாயுடன் இணைக் கப்பட்டு விட்டது.

தஞ்சைப் பெரியகோயிலிலிருந்து கிழக்கு நோக்கி வடக்குவீதி வரையிலுள்ள அகழியில், தஞ்சைப் பெரிய கோயிலை ஒட்டி தொடர்ந்து தூர்க்கப்பட்டு, மாவட்ட மைய நூலகம், பாரத வங்கி, தஞ்சையின் பழைய பேருந்து நிலையங்கள் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

**வீரன்மேடு அல்லது வீரமுண்டார், வீரங்கொண் டார் மேடு :** இது இராசராச சோழன் காலத்ததாகும். கள்ளரி னத்தில் வீரமுண்டார், வீரங்கொண்டார் என்னும் பட்டப்பெயரு டையோரின் மூதாதையான வீரபோக சோழனின் நினைவாக இந்தக் கொத்தளம் உருவாக்கப்பட்டது. இதில் கோவிராசகேசரி இராசராச சோழனின் நினைவைப் போற்றும் வகையில் 'இராச கோபால' என்னும் பெயர் பொறித்த 21 அடி நீளமுள்ள பீரங்கி ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**இராசராச சோழன் அரண்மனையும் தஞ்சை கோடியம்மன் கோயிலும் :** தஞ்சை கோடியம்மன் கோயில்,

இராசராச சோழனின் அரண்மனையை ஒட்டி, தஞ்சை நகரின் வட எல்லையில் எழுப்பப்பட்டது. இது விசயாலய சோழன் காலத்துக் கோயிலாகும். (பிற்காலச்சோழர் சரித்திரம் - பகுதி 1 பக்கம்-20].

சில ஆய்வாளர்கள். மேல அலங்கத்தில் உள்ள வடபத்திரக் காளியம்மனே விசயாலய சோழனால் எழுப்பட்ட காளிகோயில் என்பர்.

விசயாலய சோழன் காலத்தில் இந்தக் காளியின் பெயர் நிசும் சூதனி என்பதாகும். தஞ்சாவூர் மேல அலங்கத்தில் உள்ள காளி யின் சிறப்பு அம்சம்,காளியின் உடல் எலும்புக்கூடு போன்ற வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே இரண்டு காளிகோயில் கள் தான் இவ்விதம் உள்ளன. இன்னொன்று மத்திய பிரதேசத்தில் உள்ளது.

**ஆயுதக் கோபுரம்:** தஞ்சை அரண்மனை வளாகத்தில் அமைந்துள்ள ஆயுதக் கோபுரம் 190 அடி உயரத்தில் 8 அடுக்கு களைக் கொண்டதாகும். இதன் உச்சியை அடைய உட்பகுதியில் படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இது எதிரிப்படை யாதேனும் வருகிறதா என்று கண்காணிக்கும் கோபுரமாகவும், ஆயுதங்கள் சேகரித்து வைக்குமிடமாகவும் பயன் படுத்தப்பட்டது. இதனில் பலவிதமான போர் ஆயுதங்கள் இருந்தன.

இவ்வரண்மனை 1855-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் வசம் சென்றதும், இவ்வாயுதங்கள் அனைத்தும் திருச்சிராப்பள்ளிக்கு 1863-இல் கொண்டு செல்லப்பட்டு, அங்கு அதிகாரிகளால், ''பழைய ஆயுதங்கள் - புதிய போர்முறைக்குத் தேவையற்றவை'' என்று சான்றிதழ் வழங்கப்பட்டு, சில மட்டும் அருங்காட்சியகங்களுக்கு அளிக்கப்பட்டு, எஞ்சிய பெரும்பகுதி உடைத்தும் உருக்கியும் விற்கப் பட்டன என்று குறிப்புகள் உள்ளன.

**மணிக் கோபுரம் :** ஆயுதக் கோபுரத்திற்குச் சற்று வட மேற்கில் அமைந்துள்ள இக்கோபுரம், 'மணி மாடம்', 'தொள்ளக்காது மண்டபம்' என்று பொது மக்களால் அழைக்கப்படுகிறது.

இன்று ஏழு தளங்களுடன் உள்ள இக்கோபுரம் மேலும் சில தளங்களை உடையதாகக் காட்சியளித்தது என்றும், இடி, மழை, மின்னல் காரணமாக இவை சிதைந்து விட்டன என்றும் கூறுவர். மராட்டியர் காலத்தில் ஒரு புதுமையான காலம் காட்டி [கடியாரம்] இங்கு இருந்தது என்றும், அதில் ஒரு குரங்குப் பொம்மை மணி அடிப்பது போன்று இருக்கும் என்றும் சீவல் என்ற ஆய்வாளரின் குறிப்புக் கூறுகிறது.

மணிக் கோபுரத்தின் உச்சியை அடைய நூற்றுக்கும் மேற்பட்ட படிகள் உட்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

**சதர்மாடி :** இது ஏழடுக்குக் கட்டடம் என்று வழங்கப்படுகிறது. தற்போது ஆறு அடுக்குகள் மட்டுமே காணப்படுகின்றன.

**தர்பார் மண்டபம் :** இது சரசுவதிமகால் நூல்நிலையத்தை அடுத்துக் கிழக்குப் பகுதியில், ஒரு திறந்த வெளி முற்றத்துடன் அமைந்துள்ளது. மண்டபத்தின் முன் பகுதியில் மரத்தூண்களுடன் கூடிய தாழ்வாரம் உள்ளது. சில படிகள் மீது ஏறிச் சொன்றால் தர்பார் மண்டபத்தை அடையலாம். மண்டபத்தில் அமைந்துள்ள எண்பட்டை வடிவத் தூண்கள் மற்றும் வளைவுகள், சுவர்கள் ஆகியவை விடையூர்தியில் சிவபெருமான், கருடன் மீது திருமால், இந்திரன், இந்திராணி போன்ற பல சுதை உருவங்களைக் கொண்டு விளங்குகின்றன. மல்யுத்தம் போன்ற காட்சிகளும் சுதையுருவங்களாக உள்ளன. இந்தத் தர்பார் மண்டபத்தின் எதிரில் அமைந்த திறந்தவெளி முற்றத்தில் மல்யுத்தம், புலிகளுடன் மோதுதல் போன்ற வீர விளையாட்டுகள் நிகழ்ந்தன

**இராசு ராச சோழன் பற்றிய பிற செய்திகள் :**

சோழ மன்னர் வரிசையில் முதலாம் இராசராசன் மிக புகழ் பெற்ற

மன்னவனாவான். இம்மன்னன் கோழப் பேரரசனாக, தஞ்சை மாநகரில் முடிசூடிய காலம், கி. பி 985, ஜுன் மாதம் 25-ஆம் நாளாகும்.

முதலாம் இராசராசன், கி. பி. 985 முதல் கி பி. 1014 வரை [29 ஆண்டுகள்] ஆட்சிபுரிந்து, சேர, சோழ, பாண்டிய நாடுகளை ஒரு குடைக்கீழ் ஆட்சி புரிந்தவனாவான்.

இம்மன்னன் தன் தந்தையிடம் உள்ள பெருமதிப்பால் தமக்கை குந்தவையின் கட்டளையாக தஞ்சையில் சுந்தரசோழ ஆதுரசாலை என்ற மருத்துவ நிலையத்தை அமைத்தான். தன் தமக்கை குந்தவையின் அறக்கட்டளைகளைக் கல்வெட்டில் தனக்கு அடுத்த வரிசையில் பொறித்து, அதன்பின் தன் மனைவியர் கல்வெட்டுக்களைப் பொறிக்கச் செய்தான்.

மக்களிடமும் தன் பணியாளர் அமைச்சர்களிடமும் இராசராசன் அன்பும் மதிப்பும் கொண்டு தனக்கு நிகராக, கல்வெட்டுகளில் அவர்கள் கொடைகளைப் பொறித்து வைத்தான். கோயில் திருப்பணிகளிலும் அவர்களுக்குச் சிறப்பான இடம் தந்து பாராட்டினான்.

**இராசராச சோழன் தமிழ்ப்பணி :** இராசராசன் அவையில் தமிழ்ப் புலவர் பலர் இருந்தனர். தேவாரம் திருமுறைகளை சிதம்பரம் கோயிலிலிருந்து மீட்டு, நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு, தமிழ்ப்பாக்கங்களை இசை, தாளங்களுடன் பாடுவதற்கு பிடாரர் என்ற 49 இசைவாணர்களை நியமித்து மானியம் அளித்தான்.

கருவூர்த் தேவரைக் கொண்டு, பெரிய கோயில் இறைவனுக்கு, திருவிசைப்பா பாடச் செய்து சிறப்பித்தான். 63 நாயன்மார் வரலாற்றையும், தமிழ்த் திருப்பதிகங்களையும் உலகுக்கு அளித்தான்.

கி. பி. 993-இல் இராசராசன் மெய்க்கீர்த்தி என்ற பெயரில் சாசனத்தைத் தமிழ்ப் பாக்கள் வடிவில் புலவரைக் கொண்டு இயற்றிய முதல்மன்னன் இராசராச சோழனேயாவான்.

**இராசராச சோழனின் கல்வெட்டுக்கள் :** முதலாம் இராசராச சோழனின் கல்வெட்டுக்கள் நூற்றுக்கணக்கில் தஞ்சைப் பெரியகோயிலில் உள்ளன. நாடெங்கும் உள்ள இராசராசனின் கல்வெட்டுக்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவைகளாகும்.

இராசராசன் தன் கல்வெட்டுக்களில் ஆட்சியாண்டு, நாள், வென்ற நாடுகள், வெற்றிகொண்ட சிறப்பு கைப்பற்றிய பொருள்கள் போர்புரிந்த மாவீரர்கள், சேனாபதிகள் பற்றிய விவரங்களைக் குறிப்பிட்டுள்ளான்.

அறக்கொடை பற்றிய விவரங்களை முறைப்படி பொறிக்கச் செய்துள்ளான்.

தன்னுடைய படைகளின் மாபெரும் சக்தி பற்றி விவரமாகக் குறிப்பிட்டுள்ளான்.

தென்னிந்தியாவில் இராசராச சோழனைத் தவிர எந்த ஒரு மன்னனும் தன் போர்ப்படை, போர், படையெழுச்சி பற்றிக் கல்வெட்டுக்களில் குறிப்பிடவில்லை. அதற்கு வழிகாட்டி நம் இராசராச சோழனேயாவான்.

ஒவ்வொரு கல்வெட்டிலும் துவக்கத்தில் தன் ஆட்சியாண்டையும் போர்களைப் பற்றின நிகழ்ச்சிகளையும் குறிப்பிட்டிருப்பது இராசராசனின் தனித்தன்மையாகும்.

கல்வெட்டுக்களின் கருங்கற்கள் பழுதடைந்தால் உடனே பனை ஓலையில் படி எடுத்து, புதிய சுவர்களில் பொறிக்கப்பட்டன.

போரில் வீரம் புரிந்தவர்களை இராசராசன் மிகவும் பாராட்டி கல்வெட்டில் குறிப்பிடுகிறான்.

"போரில் பிரியம் வாய்ந்த" நம் பெரிய சேனை'' என்று கல்வெட்டில் குறிப்பிடுகிறான். இராசராசனால் நன்கு மதிக்கப்பட்ட வீரர்கள் பற்றியும் கல்வெட்டில் உள்ளது. போர் வெற்றியைத்

தன்னதாகக் கருதாமல் சேனை வீரர்க்கே பெருமை உரியதாகக் குறித்திருப்பது மேலும் சிறப்பாகும்

முப்பத்தொரு படையணிகளின் பெயர்களை இராசராசன் கல்வெட்டில் குறிக்கிறான். இடங்கை வலங்கை என்ற படைப்பிரிவும் இருந்தன. ஒவ்வொரு பிரிவிலும் 88 உட்பிரிவுகள் இருந்தன.

தஞ்சைப் பெரியகோயில் இறைவனுக்கு அறக்கொடையாகக் கொடுத்த அணிகலன்கள், பரிகலங்கள், ஆடு, மாடு பசு, எருமை, திருவிளக்கு, பொற்காசுகள் பற்றியும் கல்வெட்டில் உள்ளன. நிலங்கள் பற்றியும் அளவு செய்து கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன. நிலக்கொடை, நெல்வரவு, நெல் சேமித்த பண்டாரம் என்ற இருப்பிடம், அரண்மனை பண்டாரம், மூலப்பண்டாரம், பெருவுடையார் பண்டாரம் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.

கோயில் இறைவனுக்குமுன் நாட்டிய மாடிய 401-க்கு மேற்பட்ட தளிச்சேரிப் பெண்டுகள் பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன.

மற்றும கோயிலில் வழிபாட்டு விழாக்கள் விவரங்களும், தான் பிறந்த சதயநாள் விழா பற்றியும், வழிபாட்டுக்குரிய அர்ச்சனை, அபிடேகப் பொருள்கள் பற்றியும், நிவேதனப் பொருள்கள் [அமுது, வாழைப் பழம்]முதலியன பற்றியும் இராசராசன் குறிப்பிட்டுள்ளான்.

தஞ்சை அரண்மனையில், தனது மனைவியர்கட்கு 'வேளம்' என்னும் பெயரில் அமைத்துக் கொடுக்கப் பெற்ற மாளிகைகளான,
1. உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளம் ;
2. அபிமான பூஷணத் தெரிந்த பாண்டித் திருமஞ்சனத்தார் வேளம்
3. ராஜராஜத் தெரிந்த பாண்டித் திருமஞ்சனத்தார் வேளம்;
4. பஞ்சவன் மாதேவி வேளம்; 5. உத்தம சீலியார் வேளம்;
6. அருண்மொழித் தெரிந்த பரிகலத்தார் வேளம்; 7. புழலக்கன் பெண்டாட்டி, அவனிசிகாமணி கீழவேளம் ; 8. தஞ்சாவூர் பழைய

வேளம் ; 9. பாண்டி வேளம் ஆகியவற்றைப் பற்றி இராச ராசன் தனது கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளான்.

படைத்தலங்கள், பசுக்கொட்டில் [சுரபி], கோழிப் போர், விற் போர், விளையாட்டுக்கள், நியாயம் வழங்குதல், கல்லூரி, கல்வி வளர்ச்சிப் பற்றியும் கல்வெட்டுக்களில் குறிப்புகள் காணப்படு கின்றன,

தஞ்சையிலிருந்த நட்டுவர், இசைக் கலைஞா, தச்சர், கொல்லர், வண்ணார், நாவிதர், குயவர், தட்டார், பறையர், வியாபாரி [வணிகர்] பற்றியும் கல்வெட்டுக்களில் குறிப்புகள் காணப்படுகின்றன.

தஞ்சையில் முதலாம் இராசராச சோழன் காலத்தில், 1 திருபுவன மாதேவிப் பேரங்காடி ; 2. வானவன் மாதேவி பேரங்காடி ; 3 கொங் காள்வார் அங்காடி ; 4. இராஜராஜப் பிரும்ம மகாராஜப் பேரங்காடி என்னும் பெயர்களில் அங்காடிகளும் ;

1. வடக்குத் தனிச்சேரி; 2. தெற்குத் தளிச்சேரி; 3. கொங் காள்வார் அங்காடி ; 4. ரௌத்ர மாகாளத்து மடவளாகத்தெரு; 5 பிரமகுட்டத்துக் தெரு; 6. ஜய பீமதளித்தெரு; 7. ஆனைக்காடு வார் தெரு ; 8. பன்மையார்தெரு; 9. வீர சோழப் பெருந்தெரு; 10. இரரஜராஜ வித்யாதரப் பெருந்தெரு; 11. வில்லிகள் தெரு; 12. மடைப்பள்ளித் தெரு; 13. ஜயங்கொண்ட சோழப் பெருந்தெரு; 14. சூரசிகாமணிப் பெருந்தெரு; 15. சாலியத்தெரு; 16. நித்தவி நோதப் பெருந்தெரு; 17. மும்முடிச் சோழப் பெருந்தெரு; 18. வான வன் மாதேவிப் பெருந்தெரு; 19. வீரசிகாமணிப் பெருந்தெரு; 20 கேரள வீதி என்னும் பெயர்களில் தெருக்களும் இருந்தமைப் பற்றி இராசராசன் தனது கல்வெட்டுக்களில் குறிப்பிட்டுள்ளான்.

பெரியகோயிலை அடுத்திருந்த தளிச்சேரிகள் பற்றியும் வீட்டு இலக்கங்கள் பற்றியும் சுற்றுப் புறக் கோயில்கள், படிமங்கள் பற்றி யும் கல்வெட்டுக்களில் குறிப்புகள் காணப்படுகின்றன.

---

செப்புப் படிமங்கள் எத்தனை என்றும் அவற்றின் எடை, உயரம் பற்றியும் கல்வெட்டில் குறிப்புகள் காணப்படுகின்றன.

ஒவ்வொரு கல்வெட்டின் பகுதியிலும் தன்னைப் போல் மற்ற உறவினர், அலுவலர், பணியாளர், பெண்கள், பிறர் யாவரையும் மதித்துக் குறிப்பிட்டு இன்ன ஆண்டு. இன்ன நாள் என்பதும் இராசராசன் குறிப்பிட்டுள்ளான். நாடு முழுவதும் நிலங்களை அளந்தது பற்றியும் கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளான். 15

நிலங்களுக்கு நான்கெல்லை குறிப்பிட்டுள்ள கல்வெட்டுக்களும் தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ளன.

மும்முடிச் சோழன் மதில், வடவாறு, நந்தவனம், நன்செய் நிலங்கள், குளங்கள், வாய்க்கால்கள் பற்றியும்,

வரிவிலக்களிக்கப்பட்ட பொது நிலங்கள் பற்றியும் கல்வெட்டுக்களில் குறிப்புகள் காணப்படுகின்றன.

**இராசராச சோழன் காலத்தில் சோழ நாட்டிலிருந்த வள நாடுகள் :** முதலாம் இராசராச சோழன் காலத்தில், 1. இராசேந்திர சிங்க வளநாடு ; 2. இராசாசிரய வளநாடு; 3. நித்திவிநோத வளநாடு ; 4. சத்திரிய சிகாமணி வளநாடு; 5. உய்யக்கொண்டான் வளநாடு ; 6. அருண்மொழித் தேவ வளநாடு ; 7. கேரளாந்தக வளநாடு; 8. இராசராச வளநாடு; 9. பாண்டிகுலாசனிவளநாடு என்னும் பெயர்களில் வளநாடுகள் பல சோழ நாட்டிலிருந்தன.

**இராசராச சோழனின் வீரமும் வெற்றிச் சிறப்பும் :** முதலாம் இராசராச சோழன் தன் ஆட்சியின் நான்காம் ஆண்டின் தொடக்கத்தில், 'காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளிய கோஇராசகேசரிவர்மன்' என்று தன்னைக் கூறிக் கொள்வதோடு, தன் மெய்க்கீர்த்தியிலும் அச்செயலையே முதலில் குறிப்பிட்டுள்ளான். ஆகவே, இவன் கி.பி. 988–ஆம் ஆண்டில் காந்தளூர்ச் சாலையில் போர் நிகழ்த்தி வெற்றி பெற்றிருத்தல் வேண்டுமென்பது

திண்ணம். இவன் ஆட்சிக் காலத்தில் நடை பெற்ற முதற்போர் அதுவேயாகும்.

காந்தளூர்ச்சாலை என்பது திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியாக இந்நாளில் உளது. அதனை வலியசாலை [Travancore Archaeological series, vol. II PP. 4 & 5] என்றும் வழங்குவர். அது கடற்கரைப்பட்டினம் என்பது, 'சேரலன் வேலைகெழு காந்தளூர்ச் சாலை' என்ற கல்வெட்டுத் தொடரால் பெறப்படுகிறது.

இராசராச சோழன் காந்தளூர்ச் சாலைப் போருக்குப்பின் தென்கடற் கோடியிலுள்ள விழிஞத்தில் பெரும் போர் நிகழ்த்தி சேரனை வென்றான்,

பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து பாண்டியர் தலைவன் அமரபுங்களையும் பிற பாண்டியர்களையும் வென்றான். அது காரணமாகவே இவன் 'பாண்டிய குலாசனி' என்னும் சிறப்புப் பெயர் பெற்றான்.

இராசராச சோழன் தன் திக்கு விசயத்தில் பாண்டி நாட்டைக் கைப்பற்றிப் பிறகு கொல்லத்திற்குச் சென்று அங்குப் போர் புரிந்து அதனைக் கைக் கொள்வானாயினன், கொல்லம் என்பது இந்நாளில் கேரள இராச்சியத்திற்குள் அமைந்துள்ள சிறு நாடாகும். அது, முன்னர் இவ்வேந்தன் கைப்பற்றிய சேர நாட்டில் சேரன் ஆட்சியில் எஞ்சியிருந்த பகுதியாகும். அதனையும் அதனைச் சார்ந்த கொடுங்கோளூரையும் இவன் வென்று தன்னடிப்படுத்திய காரணம் பற்றி இவனுக்குக் கீர்த்திபராக்கிரமன் என்னும் சிறப்புப் பெயர் உண்டாயிற்று. [ - Annual Report on south Indian Epigraphy for the year 1911-12, para 22.]

பிறகு இராசராச சோழன் குடமலை நாட்டின் மீது போர்த் தொடுத்து அதனை வென்றான். குடமலை நாடு என்பது இந்நாளில் குடகு என்று வழங்குகிறது. [சிலப்பதிகாரம், காதை 11, வரி 53].

அதன் பின்னர், குடகு நாட்டிற்குப் பக்கத்திலுள்ள கங்கபாடியும் நுளம்பபாடியும் இராசராசன் படைகளால் தாக்கப் பெற்றன. கங்க பாடி என்பது கர்நாடக மாநிலத்தின் தென்பகுதியையும் சேலம் மாவட்டத்தின் வடபகுதியையும் தன்னகத்தே கொண்ட கங்க நாடாகும்.

நுளம்பபாடி என்பது கர்நாடக மாநிலத்தின் கீழ்ப்பகுதியையும் பல்லாரி மாவட்டத்தையும் தன்பாற் கொண்ட நாடாகும். [-E. P. Ind., Vol. X. Page-57.]

கங்கபாடி, நுளம்பபாடி இரண்டின் வெற்றிக்குப் பிறகு மைசூர் மாவட்டத்தைத் தன்னகத்தே கொண்ட தடிகைபாடியும் இராசராச சோழனுக்கு உரியதாயிற்று.

இராசராச சோழனால் வென்று கைக் கொள்ளப்பட்ட நாடு களுள் ஈழமும் [இலங்கை] ஒன்று என்பது இவனது, 'திருமகள் போல' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியினால் அறியப்படுகிறது. ஈழ மண்டலத்தில் அப்போது ஆட்சிபுரிந்து கொண்டிருந்தவன், கி. பி. 981-ஆம் ஆண்டில் பட்டம் பெற்ற ஐந்தாம் மகிந்தன் [EP. Zeylanica, Vol. III No. 1] என்பவனாவான். அவன் இராசராச சோழனுக்குப் பகைஞராயிருந்த பாண்டியர்க்கும் சேரனுக்கும் உற்று ழியுதவி வந்தனன். அது பற்றியே இராசராசன் ஈழ மண்டலத்தின் மீது படையெடுத்துச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

பண்டைக்கால முதல் ஈழமண்டலத்தின் தலைநகராக விளங்கிய அநுராதபுரம் போரில் சோழரால் அழிக்கப்பட்டமையால் அம்மண்ட லத்தின் நடுவணுள்ள பொலன்னருவா என்னும் நகரம் சனநாத மங்கலம் [- S. I. I., Vol. No. 1388] என்று பெயரிடப் பெற்றுச் சோழர்க்குத் தலைநகராக வைத்துக் கொள்ளப்பட்டது.

இனி ஈழ மண்டலம் இராசராசசோழன் ஆட்சிக்குட்பட்டி ருந்தது என்பதற்கு அந்நாட்டிலேயே பல சான்றுகள் உள்ளன. கொழும்பு மாநகரில் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப் பெற்றுள்ள

கருங்கற் பாறையொன்றில் 'சோழ மண்டலத்து சஷத்திரிய சிகா மணி வளநாட்டு வெளாநாட்டுச் சிறு கூற்ற நல்லூர்க்கிழவன் தாழிகுமரன் ஈழமான மும்முடி சோழ மண்டலத்து மாதோட்டமான இராசராசபுரத்து எடுப்பித்த ராசராச ஈஸ்வரத்து மகாதேவர்க்குச் சந்திராதித்தவல் நிற்க" [- S. I. I Vol, IV. No 1412] என்று தொடங்கும் ஒரு கல்வெட்டுக் காணப்படுகிறது. அக்கல்வெட்டால் சோணாட்டுத் தலைவன் ஒருவன் ஈழ மண்டலத்தில் மாதோட்ட நகரத்தில் தன் நாட்டு வேந்தன் பெயரால் இராசராசேச்சுரம் என்னும் சிவாலயம் ஒன்று எடிப்பித்து, அதற்கு அர்த்தயாம வழி பாட்டிற்கும் வைகாசித் திருவிழாவிற்கும் நிவந்தமாக இறையிலி நிலம் அளித்த செய்தி புலனாகின்றது. அன்றியும் ஈழ மண்டலம் இராசராசன் சிறப்புப் பெயரால் மும்முடி சோழ மண்டலம் என்று அந்நாளில் வழங்கப் பெற்று வந்தது என்பதும் மாதோட்ட நகரம் இராசராசபுரம் என்னும் மற்றொரு பெயரும் பெற்றிருந்தது என்பதும் அக்கல்வெட்டால் தெரிய வருகிறது.

சோழர்க்குத் தலைநகராயிருந்த பொலன்னருவா என்னும் ஊரில் சிவாலயம் ஒன்று கற்றளியாக அமைக்கப்பட்டுள்ளது. அதன் சிற்பவமைதியை நோக்குங்கால், கி. பி. பத்து பதினொன்றாம் நூற்றாண்டுகளில் கட்டப் பெற்ற சோழர் காலத்துக் கோயில்களைப் போல் அஃதும் அமைந்துள்ளது என்பது தெளிவாம். ஆகவே, இராசராச சோழனே அக்கற்றளியை எடுப்பித்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அக்கோயிலுக்கு வானவன் மாதேவீச்சுரம் என்னும் பெயர் (- S. I, I., Vol. IV, No. 1388] இருத்தலால் தன் தாயாகிய வானவன் மாதேவியை நினைவு கூர்தற் காரணமாகத் தலைநகராகிய பொலன்னருவாவில் இராசராசசோழன் அதனை எடுப்பித்திருத்தல் வேண்டும் என்பது உய்த்துணரக்கிடக் கின்றது. ஈழ மண்டலத்தில் காணப்படும் இராசராசன் கல்வெட்டுக் களும் அஃது இவன் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்பதை வலியுறுத்து கின்றன. [The Colas, Vol. 1, Page 206].

இவ்வேந்தன் தஞ்சை மாநகரில் தான் எடுப்பித்த பெருங்கோயிலாகிய இராசராசேச்சுரத்திற்கு ஈழ மண்டலத்திலும் சில ஊர்களை நிவந்தமாக அளித்துள்ளனன் என்பது அக்கோயிலிற் காணப்படும் கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது. (S. I. I. Vol. II. No. 92)

மாமன்னன் முதலாம் இராசராச சோழன் மேலைச் சளுக்கிய நாட்டை வெற்றி கொண்டதையடுத்து, தஞ்சைப் பெரிய கோயிலில் தட்சிணமேருவிடங்கர்க்குப் பொற்பூக்கள் வழங்கியுள்ளான். (–S.I.I, Vol, II Page 7). அப்போரின் இறுதியில் துங்கபத்திரையாற்றிற்குத் தெற்கேயுள்ள நாடுகள் இராசராச சோழன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன.

இராசராசன் மெய்க்கீர்த்தியில் இவன் வேங்கைநாடு கொண்டமையும் குறிக்கப்பட்டுள்ளது. வேங்கை நாடு என்பது கிருஷ்ணை கோதாவரி ஆகிய இரு பேராறுகளுக்குமிடையில் முற்காலத்தில் அமைந்திருந்த ஒரு நாடாகும்.

வேங்கிநாட்டை தெலுங்க வீமனிடமிருந்து கைப்பற்றிக் கீழைச் சளுக்கிய அரசகுமாரர்களான சக்திவர்மன், விமலாதித்தன் ஆகியோரிடம் அளிப்பதன் பொருட்டு, இராசராச சோழன் வெங்கி நாட்டின் மது படையெடுப்பது அவசியமாயிற்று.

இராசராசன் வேங்கிநாட்டை வெற்றிக் கொள்வதற்கு முன்னர் சீட்புலிநாடு, பாகிநாடு என்பவற்றின் மேல் படையெடுத்து அவற்றைக் கைப்பற்றுவது இன்றியமையாததாயிற்று. அந்நாடுகள் நெல்லூர் மாவட்டத்தின் வடபகுதியிலிருந்தவையாகும். (– Inscriptions of the Madras py-Nellore 239]. முதற் பராந்தக சோழன் அவற்றைக் கைப்பற்றித் தன் ஆட்சிக்கு உட்படுத்தியிருந்தான். அவனது ஆட்சியின் பிற்பகுதியில் நிகழ்ந்த இராஷ்டிரகூடர் படையெடுப்பினால் சோழ மன்னர்கள் அவற்றை இழக்கும்படி நேர்ந்தது. இராசராச சோழன் அவற்றைக் கைப்பற்றும் பொருட்டு கி, பி 991-ஆம் ஆண்டில் தஞ்சாவூர்க் கூற்றத்துக் குருகாடியுடையான் பரமன் மழபாடியானான மும்முடிச் சோழன் (Ins. 79 of 1921

S. I. I. Vol. XIII, Nos. 149 and 150) தலைமையில் ஒரு பெரும் படையை அனுப்பினான். அப்படையெடுப்பின் பயனாக, சீட்புலி நாடும் பாகிநாடும் இராசராச சோழன் ஆட்சிக்குள்ளாயின.

இராசராச சோழன் வென்று கைப்பற்றிய நாடுகளுள் கலிங்கமும் ஒன்று என்பது இவன் மெய்க்கீர்த்தியால் நன்கறியக் கிடக்கின்றது. கலிங்கநாடு என்பது கோதாவரியாற்றிற்கும் மகாநதிக்குமிடையில் கீழ்கடலைச் சார்ந்திருந்த ஒரு நிலப்பரப்பாகும். அஃது இந்நாளில் வடசர்க்கார் என்று வழங்கும் நிலப்பகுதியில் அடங்கியுள்ளது.

இராசராச சோழனது போர்ச் செயல்களுள் இறுதியில் நிகழ்ந்தது இவன் முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரத்தைக் கைப்பற்றியமையேயாகும்.

பழந்தீவு பன்னீராயிரம் என்பது சேரநாட்டிற்குத் தென்மேற்கே அரபிக் கடலிலுள்ள மாலத்தீவுகளைக் குறிக்கும் பழைய பெயராகும், 'கன்னித் தென்கரைக் கடற்பழந்தீபம்'என்னும் அகத்தியச் சூத்திரத்தினாலும் [- தொல்காப்பியம், சொல்லதிகாரம். தெய்வச்சிலையார் உரை, பக்கம். 218, 219], 'குமரியாற்றின் தென்கரைப்பட்ட பழந்தீபமும்' என்னும் தெய்வச்சிலையாரது தொல்காப்பியச் சொல்லதிகார உரைப் பகுதியினாலும் [ஷி உரை, பக்-219] பண்டைக் காலத்தில் குமரியாற்றிற்குத் தெற்கே கடலில் பழந்தீவுகள் இருந்தமை இனிது புலனாகும். எனவே அவை சேர நாட்டிற்குத் தென்மேற்கே அண்மையில் இருந்தமையின் அத்தீவுகளிலிருந்த மக்களால் சேரநாட்டினர்க்கு அடிக்கடி இன்னல்கள் நேர்ந்திருக்கலாம். சேரநாடு இராசராச சோழன் ஆட்சிக்குட்பட்டிருந்தமையால் அந்நாட்டு மக்களின் துன்பங்களை ஒழிப்பதும் இவ்வேந்தனது கடமைகளுள் ஒன்றாகும். அது பற்றியே இவன் பழந்தீவுகளின் மேல் படையெடுத்து அவற்றைக் கைப்பற்றியிருத்தல் வேண்டும்.

# தஞ்சைப் பெரியகோயில் வரலாறு

தஞ்சைப் பெரியகோயிலின் இயற்பெயர் இராசராசேச்சுரம் என்பதாகும். இதனை முதலாம் இராசராச சோழன் கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் கட்டினான். இது முதலாம் இராசராச சோழனால் கட்டப்பட்டது என்பதே, 1896-ஆம் ஆண்டில்தான் தெரிய வந்தது. ஹால்ஸ் என்ற ஜெர்மன் நாட்டு அறிஞர் கல்வெட்டு ஆராய்ச்சி செய்து இதைத் தெரிவித்தார். அதற்கு முன் இது பூதம் கட்டிய கோயில் என்றும், வேறு சோழ, நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டது என்றும் பலவிதமாகப் பேசப்பட்டு வந்தது

தஞ்சைப் பெரிய கோயில் அகில இந்திய அளவில் சிறந்த பிரமாண்டமான கற்கோயில் ஆகும். போர்க் காலத்தில் கூட குண்டுகளைப் பயன்படுத்தக் கூடாத உலகின் அதிசயங்களில் ஒன்றாகத் தஞ்சைப் பெரிய கோயிலை யுனஸ்கோ நிறுவனம் அறிவித்துள்ளது.

தஞ்சைப் பெரிய கோயிலின் கற்பகிரகத்தின் மேல் 14 கோபுர மாடிகள் உள்ளன கோயில் 793 அடி நீளமும், 397 அடி அகலமும் உடையது. நடுவிமானம் 216 அடி உயரமுடையது. (The Great Temple at Tanjure P. 6, 8] ; இது 40 அடி மற்றும் 14 அடி அகல சுவர்களைப் பிடிமானமாகக் கொண்டு மேல் நோக்கி எழுப்பப் பட்டதாகும்

கோபுரத்தின் உச்சியில் போடப்பட்டிருப்பது ஒரே கருங்கல். அஃது ஏறக்குறைய எண்பது டன் எடையுள்ளது என்றும் [I bid, P. 9] விமானத்தின் மேல் அமைக்கப்பெற்றுள்ள செப்புக்குடம் 3083 பலம் நிறையுடையது என்றும் (S. I. I. Vol. II. P-3), அக்குடத்தின் மேல் போடப்பட்டுள்ள பொற்றகடு 2926½ கழஞ்சு கொண்டது. என்றும், [Ibid] கோபுரத்தின் நிழல் கீழே விழாதென்றும், கோயிலின் அஸ்த்திவாரம் 5 அடி மட்டுமே என்றும் கோபுரத்தின் உச்சியில் உள்ள தளத்தில் ஒரு மாட்டு வண்டி தாராளமாக வலம் வரலாம் என்றும், கோபுரத்தின் உச்சியில் போடப்பட்டுள்ள 80 டன் எடையுள்ள கல்லை மேலே ஏற்றுவதற்குத் தஞ்சாவூரிலிருந்து வடகிழக்கில் 6 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வயலூருக்கு அருகில் சாரபள்ளம் என்னும் இடத்திலிருந்தும், மேற்கில் 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ரெட்டிப் பாளையம் என்னும் இடத்திலிருந்தும் சாரம் அமைக்கப்பட்ட தென்றும், கோயிலைக் கட்டுவதற்கான கற்கள் முழுக்க முழுக்க புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து கொண்டுவரப்பட்டனவென்றும் அவற்றை ஆராய்ந்த அறிஞர்கள் உரைக்கின்றார்கள்.

தஞ்சைப் பெரியகோயிலின் திருப்பணி முதலாம் இராசராச சோழனது ஆட்சியின் 19-ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்று 23-ஆம் ஆண்டில் பெரிதும் நிறைவேறி. 25-ஆம் ஆண்டு [கி.பி. 1010] 2-ஆம் நாளில் குடமுழுக்காகிய கடவுண் மங்கலம் நடைபெற்றது.

தஞ்சைப் பெரிய கோயிலுள்ள முதற் கோபுர வாயிலாகிய திருத்தோரண வாயில் கேரளாந்தகன் வாயில் எனவும், இரண்டாம் வாயிலாகிய திருமாளிகை வாயில் இராசராசன் வாயில் எனவும் அந்நாளில் வழங்கியுள்ளன. அக்கோயில் விமானம் தட்சிணமேரு, என்று வழங்கியது.

கோயிலின் வெளித் திருச்சுற்றில் 500 அடி நீளமும் 250 அடி அகலமும் உடைய பரந்த வெளியில் ஒரே கல்லாலான நந்தி ஒன்று உள்ளது. அது 12 அடி உயரமும் 19½ அடி நீளமும் 8¼ அடி அகலமும்

உடையது. (The Great Temple at Tanjure Page 12); 25 டன் நிறையுடையது. நந்தி திருச்சி மாவட்டம் பெரம்பலூருக்கு அருகிலுள்ள பச்சை மலையினின்றும் கொண்டுவரப் பட்ட கல்லினின்றும் அமைக்கப்பட்டதாகும். கோயிலுக்கு முன்னுள்ள நந்தியைப் போல் எட்டு நந்திகள் கோபுரத்தின் உச்சியில் உள்ளன.

**நந்தியின் முதுகில் தேரை :** தஞ்சைப் பெரிய கோயிலின் முன்னுள்ள பெரிய நந்தியின் முதுகில் தேரை ஒன்று இருந்ததால், நந்தி தொடர்ந்து வளர்ந்து வந்தது. நந்தியின் வளர்ச்சியைத் தடுத்திட நந்தியின் முதுகில் ஆணி அறையப்பட்டு தேரை வெளியேற்றப்பட்டது. அவ்வாறு வெளியேற்றப்பட்ட தேரை புனித நீரில் விடப்பட்டது.

**கருவறை :** தஞ்சைப் பெரியகோயிலின் கருவறையின் உள்ளே பொதுவாக இருட்டாகத்தான் உள்ளது. பகலில் கூட இறைவனின் உரு சரியாகத் தெரிவதில்லை. ஆதியில் உலகம் இருட்டாக இருந்தது என்று கூறுவதற்கு ஏற்ப கருவறையில் இருட்டு உள்ளது என்று கருதப்படுகிறது. மேலும் கருப்பையில் எவ்வாறு வெளிச்சம் ஏதுமின்றி இருட்டு உள்ளதோ, அதேபோன்று ஆலயத்தின் கருப்பையான இங்கும் இருட்டுத்தான் உள்ளது.

**இலிங்கம் :** கருவறையில் 1.80 மீட்டர் உயரமும், 16.20 மீட்டர் சுற்றளவும் உள்ள ஆவுடையார் மேல் 6.90 மீட்டர் உயரமுள்ள இலிங்கம் உள்ளது. இது நர்மதை நதிக்கரையிலிருந்து கொண்டு வரப்பட்டதாகும். இது உலகின் மிகப்பெரிய இலிங்கமாகும்.

**கடவுளின் பெயர் :** தஞ்சைப் பெரியகோயிலுள்ள இறைவனுக்கு, "இராசராசேச்சுரமுடையார்" என்னும் பெயரைத் தவிர, "தட்சிண் மேருவிடங்கள்" என்றும், "ஆடவல்லான்" என்றும் பெயர்கள் வழங்கப்பெற்றன. 'பெருவுடையார்" என்பது பிற்காலத்தில் வழங்கப்பெற்ற பெயராகும்.

**சிற்பங்கள் :** கருவறையைச் சுற்றி உள்சுற்றுப்பாதை காணப்படுகிறது. கருவறையைச் சுற்றியுள்ள உள்சுற்றுப்பாதை மேலே மூடப்பட்டுள்ளது. இங்கு அருமையான வேலைப்பாடுள்ள 3 கற்களாலான உருவங்கள் அமைக்கப்பட்டுளன. இரண்டு கைகளுடன் ஜீவாஹரமூர்த்தி உட்கார்ந்த நிலையில் உள்ளார். இவருடைய ஒரு கையில் வாளும், மற்றொரு கையில் சூலமும் காணப்படுகின்றன. அடுத்து உள்ளது சத்யோஜாதமூர்த்தி; இவர் எட்டுக் கைகளுடன் உருவாக்கப்பட்டுள்ளார். கதை, சூலம் ஆகியவை வலக்கைகளிலும், பாசம், கேடயம் ஆகியவை இடக்கைகளிலும் காணப்படுகின்றன. இடப்புறம் பார்வதியும், வலப்புறத்தில் மத்தளம் அடிக்கும் நிலையில் திருமாலும் உள்ளனர் கடைசியாக, வீற்றிருக்கும் நிலையில் ஒரு பெண்வடிவம் உள்ளது அதன் வலக்கையில் அக்கமாலையும் இடக்கையில் பூவும் காணப்படுகின்றன இந்த வடிவம் திருமகள் மற்றும் கலைமகள் ஆகிய இருவரும் கொண்டது எனக் கூறப்படுகிறது.

**முதலாம் இராசராச சோழன் திருவுருவச்சிலை :** தஞ்சைப் பெரிய கோயிலின் உள்ளே இராசராச சோழன் காலத்தில் வைக்கப் பட்ட முதலாம் இராசராச சோழனின் சிலை ஒன்றுள்ளது.

**ஓவியங்கள் :** கருவறையைச் சுற்றியுள்ள உள்சுவர்களில் இராசராசன் காலத்திய ஓவியங்கள் காணப்படுகின்றன. மேற்புறச் சுவரில் யோகநிலையில் ஆலமர் செல்வன் தீட்டப்பட்டுள்ளார். தேவமாதர் இருவர் நடனம் புரிகின்றனர். திருமாலும் பூத கணங்களும் இன்னிசைக் கருவிகளை இசைக்கின்றனர். சிறிது தொலைவில் யானைமீது அமர்ந்து வன்றொண்டராம் சுந்தரரும், குதிரையின் மீது உட்கார்ந்து சேரமான் பெருமாள் நாயனாரும் கைலாயப் பயணம் செல்வது சித்தரிக்கப் பட்டுள்ளது. அதற்குக் கீழே கிழ வேதிய உருவில் சசிசேர்சடை முடியராகிய சிவபெருமான் சுந்தரரைத் திருமண நாளன்று தடுத்தாட்கொண்ட நிகழ்ச்சி தீட்டப்பட்டுள்ளது. திருமணத்திற்கு வந்திருந்தோரின் முகத்தில் திருமணம் தடைபட்டதால் ஏற்பட்ட சினம் நன்கு புலனாகிறது, ஒரு குடும்பத்தின் அன்றாட வாழ்க்கையும் காட்டப்பட்டுள்ளது பெண்கள் சமையலில்

ஈடுபட்டிருக்க, ஒருவன் உணவருந்திக் கொண்டிருப்பது காணப்படு கிறது.

இதனையடுத்து ஆனந்த நடனப்புரியும் ஆடவல்லானும், பூசனை செய்வோர் மற்றும் வந்தனை செய்வோர் ஒரு புறமும், தன் தேவியருடன் ஓர் அரசன் மற்றொரு புறமும் தீட்டப்பட்டுள்ளனர். அரசனுடைய பரிவாரங்கள் தற்கால 'புஷ்கோட்' போன்றவற்றை உடையாக அணிந்துள்ளார்கள். இங்குள்ள ஓவியங்களினின்றும் தற்காலத்திய கெட்டில் போன்ற தண்ணீர் எடுக்கும் பாத்திரம் அக் காலத்தில் இருந்ததும், தற்காலப் பெண்கள் கைகளிலே கொண்டு செல்லும் பையைப் போன்று அக்காலத்தே இருந்ததும் தெரியவரு கிறது.

வடபுறங்களில் கனலாடு கண்ணால் முப்புரம் எரித்த பெம்மா னின் போர்க்கோலம் கவினுறத் தீட்டப் பட்டுள்ளது. அண்ணல் படைக்கலங்களை ஏந்திய 8 கைகளுடன், மேருவாகிய வில்லை வளைத்து, வாசுகியை நாண் ஏற்றித் திருமாலாகிய அப்பை வைத்து எய்யும் நிலையில் காணப்படுகிறார். நான்முகன் தேரினைச் செலுத்த, மூத்த பிள்ளை பெருச்சாளி மீதும், காளி சிங்கத்தின் மீதும் அமர்ந்து உடன்வரும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. அரண் மூன்றும் முனிந்தான் மற்றும் தானவர்களின் முகங்களில் வீரம் செறிந்து காணப்படுகிறது. தானவர்களைச் சார்ந்தோர் என்ன நேருமோ என அஞ்சுவதால் பரிவுக்கு உரியவர்களாகத் தென்படு கின்றனர். எயில் மூன்றும் எரித்தானின் வீரக்கோலத்தைக் கண் ணுற்ற தேவர்கள் வியப்பின் எல்லையை எய்தியமை காணப்படு கிறது.

விமானத்தின் மேற்றளத்தின் உட்புறத்தில் 108 நடனங்களில் 81 நடனங்கள் கல் உருவங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 27 நடனங்களும் உருவாக்கப்படாமல் நின்று விட்டன. இந்தியாவில் இங்கு தான் முதன் முதலில் நடனங்கள் கல்வடிவங்களாக அமைக்கப் பட்டன என்பது ஆராய்ச்சியாளர் முடிவு.

**தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிய தச்சர்கள் :** தச்சாசாரியன்—அதாவது சிற்பிகளின் தலைவன் வீரசோழன் குஞ்சரமல்லனான ராஜராஜப் பெருந்தச்சன் என்பவன் தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிய தச்சனாவான். இவனுக்கு உதவியாக இருந்தவர்கள், மதுராந்தகனான நித்தவினோத பெருந்தச்சன் மற்றும் இலத்திசடையனான கண்டராதித்த பெருந்தச்சன் ஆகியோராவார்.

**கோயில் விளக்குகள் எரிய வழிவகை செய்தமை :** தஞ்சைப் பெரியகோயிலுள்ள விளக்குகள் எரிய முதலாம் இராசராச சோழனும் தனிப்பட்டோரும் 6956 பசுக்களையும், 8568 ஆடுகளையும், 60 எருமைகளையும் நிவந்தமாக அளித்தார்கள். இவற்றினின்றும் கிடைக்கும் நெய்யைக்கொண்டு 160 விளக்குகள் எரிந்தன.

**தளிச்சேரிப் பெண்டுகள் :** இராசராசன் தான் எடுப்பித்த பெரியக்கோயிலில் நடனமாட 400 தளிச்சேரிப் பெண்டுகளைப் பிற கோயில்களினின்றும் கொண்டு வந்தான். அப்பணி தொடர்ந்து நீடிக்க அவர்களுக்குப் பின் எந்த முறைகளில் அந்த இடம் நிரப்பட வேண்டும் என்பதையும் கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளான். இதுவுமன்றி நட்டுவஞ் செய்யவும், வீணை போன்ற இசைக்கருவிகள் இசைக்கவும் தக்க ஏற்பாடுகளைச் செய்தான். தேவாரத் திருப்பதிகங்கள் விண்ணப்பஞ் செய்யவும் வழிவகுத்தான்.

இராசராச சோழனின் ஆணைப்படி தஞ்சைப் பெரியகோயிலின் திருச்சுற்று மாளிகை எடுப்பித்தவன் சேனாபதி கிருட்டிணன் இராமனான மும்முடிச்சோழ பிரம்மராயன் என்பவனாவான்.

**தஞ்சைப் பெரியக்கோயிலில் இராசராச சோழன் அளித்த தெய்வச் சிலைகள் :** பஞ்சதேசமூர்த்திகள், சுப்பிரமணியத்தேவர், தட்சிணாமூர்த்திகள், மகாவிட்ணுக்கள், தக்கண மேருவிடங்கர், தஞ்சை விடங்கர், பிள்ளையார், மகா மேருவிடங்கர் சண்டேசுவரத் தேவர், ஆடவல்லார், சண்டேசுவரபிரசாதத் தேவர்,

எம்பிராட்டியார், நம்பிராட்டியார், ஸ்ரீபலி எழுந்தருளும் பொன்னின் கொள்ளைத் தேவர் மற்றும் பொன்னின் சேத்திரபாலத் தேவர் ஆகியோரின் தெய்வத் திருமேனிகளைத் தஞ்சைப் பெரியகோயிலுக்கு இராசராசன் அளித்துள்ளான். இராசராசனின் திருமேனி ஒன்றும் அந்தக்காலத்தில் தஞ்சைப் பெரிய கோயிலுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இராசராசனுடன் கூட, அவனுடைய தமக்கை குந்தவைப் பிராட்டியர், அவனுடைய தேவியர் உலோக மாதேவி, பஞ்சவன் மாதேவி அபிமானவல்லி, இலாடமாதேவி ஆகியோரும் கிருட்டினன், ராமன், ஆதித்தன், சூரியன் ஆகிய அலுவலர்களும், 66 தெய்வத் திருமேனிகளைக் கோயிலுக்கு அளித்துள்ளார்கள்.

இராசராசன் தான் அளித்த செப்புத் திருமேனிகள் கனமா இல்லையா, எவ்வளவு உயரம், எத்தனை கைகள் கொண்டவை, தாமரை இதழ் மற்றும் பீடம் ஆகியவற்றின் உயரம் என்ன என்பது பற்றிய அனைத்து விவரங்களையும் கல்வெட்டில் நுணுக்கமாகக் குறிப்பிட்டுள்ளான்.

**ஓதுவார்:** தான் கட்டிய தஞ்சைப் பெரியகோயிலில் திருப்பதிகம் விண்ணப்பஞ்செய்ய 48 ஓதுவார்களையும், உடுக்கை வாசிப்பான் ஒருவனையும் நியமித்து, இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஆடவல்லான் என்னும் மரக்காலால் முக்குறுணி நெல் அளக்கவும் இராசராசன் ஏற்பாடு செய்தான்.

தஞ்சைப் பெரியகோயில் இறைவன் மீது இராசராசன் காலத்தவரான கருவூர்த் தேவர் என்னும் பெரியார் ஒரு பதிகம் பாடிப்பரவியுள்ளார். அது சைவத்திருமுறைகளுள் ஒன்றாகிய ஒன்பதாந் திருமுறையில் சேர்த்துத் தொகுக்கப்பட்டுள்ளது.

## இராசராச சோழன் தஞ்சைப் பெரிய கோயிலுக்கு அளித்த கொடைகள் :

1. இலங்கையிலும் இந்தியாவிலும் நிலங்களையும் ; 2. 41,559 கழஞ்சு எடையுள்ள பொற்கலங்களையும்; 3 10,200 காசு விலை

மதிப்புள்ள அணிகலன்களையும்; 4. 50,650 கழஞ்சு எடையுள்ள வெள்ளிக் கலன்களையும்; 5. 1, 16, 000 கலம் நெல்லும், 1, 100 காசும் வருவாயுள்ள கிராமங்களையும் இராசராசன் தஞ்சைப் பெரிய கோயிலுக்குக் கொடைகளாக அளித்தான்.

இராசராசனின் கொடைகளைத் தவிர மற்ற உடன் பிறந்தாரான தமக்கையார், புதல்வி, மனைவியர், அரசு அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோரின் கொடைகளைப் பற்றிப் பல நூறு கல்வெட்டுகள் உள்ளன.

## கோயில் பாதுகாப்புப் படை :

இராசராச சோழன் தஞ்சைப் பெரியகோயிலின் பாதுகாப்பின் பொருட்டு, 1. கேரளாந்தகத் தெரிந்த வாசல் மெய்க்காப்பாளர்; 2. அணுக்கவாசல் திருமெய்க் காப்பாளர்; 3. பரிவார மெய்க்காப்பாளர் என்னும்பெயரில் தனியேவீரர் படைகளை அமைத்திருந்தான்.

தென்னிந்தியாவில் இந்தக் கோயிலில் தான் முதலில் பகைவர் படையெடுப்பினின்றும் பாதுகாக்க அகழிகள் வெட்டிக் கோட்டை எடுப்பிக்கப்பட்டது.

இப்போது பெரியகோயிலுக்கு முன்னுள்ள அகழியைத் தவிர மற்ற அகழிகள் அழிந்த நிலையில் உள்ளன. சில தூர்க்கப்பட்டு வருகின்றன. பெரியகோயிலை ஒட்டி தெற்கிலிருந்த அகழிகல்லணைக் கால்வாயுடன் இணைக்கப்பட்டுவிட்டது.

## தஞ்சைப் பெரியகோயிலில் உள்ள அங்கியர் உருவம் :

தஞ்சைப் பெரியகோயிலில் கோமுகத்தின் மேல் ஓர் ஐரோப்பியன் உருவம் தலையளவில் உள்ளது. இதைப் பற்றிப்பல கருத்துகள் நிலவுகின்றன. இவ்வுருவம் 13-ம் நூற்றாண்டில் தென்னிந்தியா வந்து சென்ற 'மார்க்கோ போலோ' என்ற புகழ் மிக்க வெனிசு நகரப் பயணி என்பர் ஒரு சாரார். 17-ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் தஞ்சையையாண்ட இரகுநாதநாயக்கர் சபையில் இருந்த டென்மார்க்

நாட்டைச் சார்ந்த கிழக்கு இந்திய நிறுவனத்தின் தலைவனான, 'ரோலண்ட்கிரேப்' என்பார் வேறு சிலர்.

## தஞ்சைப் பெரியகோயில் பற்றி மேலும் சில செய்திகள்

### விநாயகர் சந்நதி :

தஞ்சைப் பெரியகோயிலின் உள்ளே தென்மேற்கு மூலையில் விநாயகர் சந்நதி ஒன்று உள்ளது. இந்த விநாயகரைத்தான் இராச ராச சோழன் அன்றாடம் வணங்கினான். இந்த விநாயகருக்குப் பூஜையின் பொருட்டு தினமும் 150 வாழைப் பழங்கள் தேவைப்பட்ட தால், இராசராசன் தனது சொந்தப் பணம் ரூ. 5000/–ஐ மூன்று வியாபாரிகளுக்குக் கடனாக அளித்து, அவர்கள் வட்டித் தருவதற்குப் பதிலாக மூவருமாக இணைந்து, விநாயகர் கோயிலுக்குத் தினமும் 150 வாழைப்பழங்கள் கொடுத்து வரவேண்டுமெனப் பணித்தான்.

### நாட்டியாஞ்சலி :

தஞ்சைப் பெரியகோயிலின் மேல் மண்டபத்தில் இராசராச சோழன் 453 ஆடல் கன்னியர் மூலம் ஆடவல்லானான இறைவனை நாட்டியாஞ்சலி செய்து வழிப்பட்டான். இந்த ஆடல் கன்னியர் மூல விக்கிரகத்தின்மேலிருந்த பரவெளியை பிரபஞ்சத்தை நாட்டியாஞ்சலி செய்து வழிப்பட்டனர். இந்த ஆடல் கன்னியர் ஆடற்கலையை முற்றும் கற்றுணர்ந்தவர்களாவார்கள். சோழன் இவர்களுக்கு ஒரே இடத்தில் இல்லங்கன் அமைத்துக் கொடுத்து அவற்றிற்கு இலக்கங் களும் இட்டிருந்தான் அவர்களுக்கு எல்லா வசதிகளும் முழு சுதந் திரமும் கொடுத்திருந்தான். ஓர் ஆடல் நங்கை நாட்டியமாடுவது பிடிக்காமல் செல்ல விரும்பினால், அவரைப் போலவே பாரதம் கற்று ணர்ந்த இன்னொருவரை நியமித்து விட்டேசெல்ல வேண்டும் என்ற ஒரு சிறு நிபந்தனையை மட்டும் விதித்திருந்தான்.

**இலிங்கம் பிரதிருஷ்டை செய்த பின்னரே கோயில் கட்டப் பட்டமை !** சோழன் இலிங்கத்தை பிரதி ருஷ்டை செய்து விட்டே பின்னர் ஆலயத்தை எழுப்பினான்.

ஏனென்றால் கற்பகிரகத்தின் வாயிலை விட இலிங்கம் பெரிய அளவைக் கொண்டது. இலிங்கத்திலிருந்து மேலே நோக்கினால், 216 அடியையும் உள்ளிருந்து விமானத்தைப் பார்க்கும் வகையில் பிரபஞ்சமாக அமைத்திருந்தான். இது பார்க்கும்போது, 'ஸ்ரீசக்கரம்' என்ற அமைப்பாக இருக்கும்.

**இராச ராச சோழனின் மனைவியர் அளித்த அறக் கொடைகள் :** தஞ்சைப் பெரியகோயில் இறைவனுக்கு இராசராச சோழன் மனைவியர் தம் சொந்தப் பயணத்தில் ஓர் நவரத்தின மாலை உபயம் செய்தது கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு இரத்தினமும் இவ்வளவு எடை கொண்டது. இவ்வளவு எடை கொண்ட தங்கத்தில் பதிக்கப்பட்டுள்ளது. இதன் அளவு, இதை கட்ட உதவும் பட்டுக் கயிற்றின் நீளம் இவ்வளவு, இது அனைத்தும் சேர்த்து மொத்த எடை எவ்வளவு என்பது பற்றியும் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

**தஞ்சைப் பெரிய கோயிலில் விளக்கு எரிக்க உபயம் :** இராசராச சோழன் காலத்தில், ஒருவர் தஞ்சைப் பெரிய கோயிலுக்கு ஓர் விளக்கு உபயமாக அளிக்க விரும்பினால்கம், அத்துடன் அவர் 96 ஆடுகள்; அல்லது 32 பசுக்களும் 2 எருதுகளும் அல்லது 16எருமைகளும் தானமாக கொடுக்க வேண்டும், அவை அவர் பெயரிடப்பட்டு கோயிலின் தலைமை நிர்வாகியினால் குறிப்பு ஓலையில் வரவு வைக்கப்படும். பின்னர் ஊரில் உள்ள ஏதாவது ஒரு விவசாயி அல்லது கால்நடை வளர்ப்போரை அழைத்து இந்தக் கால்நடைகள் அவர்களிடம் ஒப்புவிக்கப்படும். ஒரு நிபந்தனையுடன் இந்தக் கால்நடைகள் என்றும் இன்றிருக்கும் எண்ணிக்கையில் கோயில் பெயருக்கு இருக்க வேண்டும். இதன் மூலம் கிடைக்கும் வருவாயையும், கால் நடைகள் பெருகும் போது அவற்றையும் எடுத்துக் கொள்ளலாம் [இதற்குச் சாவா மூவா கால்நடைகள் என்பர்] பதிலாக அவன் அந்த விளக்கிற்கு வேண்டிய எண்ணெய்யைத் தினமும் தந்துவிட வேண்டும். இதனால் கால்நடைகள் பெருகியதுடன் மக்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்புகளும் கிடைத்து அவர்கள் செழிப்புடன் வாழ இராச ராசன் வழி அமைத்துக் கொடுத்தான்.

## மேற்கோள் பட்டியல்

1. சோழர்கள், புத்தகம் 1, பக்கம் 35, பேராசிரியர் கே. ஏ. நீல கண்ட சாஸ்திரி, மு. ப. நவம்பர், 1989 இந்தியன் கவுன்சில் ஆப் ஹிஸ்டாரிகல் ரிசர்ச், நியூதில்லி அண்ட் நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, கார்மிகல் சொற்பொழிவுகள், 1918, பக். 8-9.

2. "திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ கோனேரி மேல்கொண் டான் .........".

"கோனேரி மேல் கொண்டான் கருவூர்த் திருவானிலை ஆளு டையார் கோயில் தேவர்கள் மிகளுக்கு ......" —கருவூர் பசுபதீச்சுரர் கோயில் கல்வெட்டு.

3. தென்னிந்திய சாசன புத்தகம் மூன்றாவது தொகுதி, முதற்தொகுதி 59-ம் சாசனத்தில் வந்துள்ள பட்டங்களில் 'சோழங்கன்' என்பதும் ஒன்று, 'தன் திருத்தம்பியர் தம்முள் — மதுராந்தகனைச் சோழகங்கனென்றும், மணிமுடி சூட்டி' எனக் கூறப்பட்டுள்ளது.

4. கள்ளர்சரித்திரம், வேங்கடசாமி நாட்டார் [பாண்டித, நாவலர். ந. மு.], பக். 37, 39, 1984, நூற்றாண்டு விழா வெளியீடு, தஞ்சாவூர்.

5. 'மேற்கெழுந்தருளிய தேவர்'-சிதம்பரம் வட்டம் ________ உடையார்குடி கல்வெட்டு.

6. 'ஆற்றூர்த் துஞ்சின தேவர்' — வட-ஆர்க்காடு மாவட்டம் ஆற்றூர் கல்வெட்டு.

7 'பொன்மாளிகைத் துஞ்சின தேவர்' — S. I. I. Vol. II No. 6 ; Vol. V Nos. 723 and 980.

8. 'ஸ்ரீ உத்தம தேவர்'

9. 'உடையார் ஸ்ரீ ராசராச தேவர் ;

உடையார்—மரியாதை மொழி ; கடவுள், அரசர், குரு இவர்கள் பெயர்களின் முன் இம் மொழியை அமைத்துக் கூறுவது பண்டைய மரபு - கல்வெட்டு, பக். 31, சுந்தரேச வாண்டையார்.

10. 'இராசேந்திரசோழ தேவர் — திரைலோக்கி மாதேவிச் சதுர்வேதி மங்கலத்திலுள்ள கல்வெட்டு.



**இரண்டாம் இராசராச சோழனும்**
**அவன் மனைவியும்**

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்திற்கு அருகில் உள்ள
தாராசுரம் கோயிலில் உள்ள சிலைகள்.

மாணிக்கம் அச்சகம். தஞ்சாவூர்-9. போன் : 20953